ஸம்புடம் 13
ஸஞ்சிகை 4

ஸ்ரீ:

ஜய ஸூ
சித்திரை மீ

235

235
2-5-54

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமனத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

REGISTRAR
20 APR 1954
MADRAS



அலர்மேல் மங்கையும் ஸ்ரீநிவாஸனும்

தனிப்ரதி விலை 0—4—0

APRIL 1954
VOL 13 NO. 4.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	96
2. 'நீயும் அதுதான்'	100
[ஸ்ரீ. உப. வித்வான், T. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, ப்ரின்ஸிபால், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	
3. திருப்பாவைக்கதை	103
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O L. திருப்பதி.]	
4. நற்போது போக்கு	107
[ஸ்ரீ. உப. ஒரகடம் ஸுதர்சனசார்யஸ்வாமி, ரிடையர்டு தமிழாசிரியர், அவளூர்.]	
5. அபீதிஸ்தவம்	111
[ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	
6. ஆதிபகவன்	115
[ஸ்ரீ. உப. பந்தல்குடி பா. ரே. திருமலை அய்யங்கார்ஸ்வாமி, தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், அம்பத்தூர்.]	
7. செய்திகள்	119
8. கும்பமேளா	120
[ஸ்ரீ. உப. A. S. அய்யங்கார் ஸ்வாமி, பம்பாய்.]	
9. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	123

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ சித்திரை ௴ { ஸஞ்சிகை 4

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

SEARCH OF THE REGISTRAR OF BOOKS ... APR 1954 ... MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमोभगवते पुरुषाय तस्मै ॥

'सत्यमेव जयते' (உண்மையே ஜயிக்கிறது.) என்பது உபநிஷத் வாக்யம். **'सत्यं वद'** (உண்மை பேசு) என்கிறது மற்றொரு உபநிஷத். **'सत्ये धर्मं प्रतिष्ठितम्** (ஸத்யத்தில் தர்மம் நிலைத்திருக்கிறது) என்றும் ஓர் உபநிஷத் கூறுகிறது. இப்படியாகவே நூற்றுக்கணக்கான விடங்களில், வேதத்தினுடைய முடிவு பாகமாகிய உபநிஷத்துக்களில், இவ்வுண்மை உரைக்கப்பட்டிருக்கிறது.

நவீன காலத்தில் ஆழ்ந்த பழைய காலத்துக்கருத்துக்களை அறிந்துகொள்ள சக்தியற்ற சிலர், 'நமது மதத்தின் அடிப்படைக்கொள்கைகள் என்ன? எவ்விடத்தில் இவைகள் கூறப்பட்டுள்ளன? பார்க்கப் போகில் நமது மதம் பல வைதிக கர்மாக்களை மட்டில் வற்புறுத்துவதாகவேதான் தோன்றுகிறது. பிறமதங்கள் உயர்ந்த நோக்குகளைக் கொண்டுள்ளன' என்றெல்லாம் கூறுவதைக் கேட்கும் நாம், அன்னார்களுடைய மனோ நிலையைக் கண்டு வருந்த வேண்டியிருக்கிறது. நமது வைதிக(வேதஸம்பந்தமான) மதத்தில் காணப்படாத உயர்ந்த கொள்கைகள் வேறு ஒரு மதத்திலும் கிடையாது. மற்றெல்லா மதங்களிலும் காணப்படும் உயர்ந்த கொள்கைகளெல்லாம் நம் வைதிக மதத்தில் ஆங்காங்கு பொதிந்து காணப்படுகின்றன. ஸத்யம், அஹிம்ஸை எனப்படும் கொள்கைகள் நமது மதத்தில்தான் முதலில் தோன்றின. இவைகளைத்தான் ஆயுதப் போட்டியிலிறங்கியுள்ள இக்காலத்தவர்கள் கூட உயர்ந்த கருத்துக்களாக மதிக்கின்றனர். இம்மையிலும், மறுமையிலும் ஆநந்தத்தை விரும்புமவர்கள் இவ்வுலகில் நடந்து கொள்ள வேண்டிய வழிகளையும், மறுமைக்காக நாம் செய்யவேண்டிய கார்யங்களையும் நன்கு வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். இக்கருத்துக்களைத்தான் இவ்வுலகை உண்டாக்கிய ஸ்ரீய: பதி நமக்கு வேதங்கள் மூலமாக தெளிவுபடுத்தியிருக்கிறான் என்பது நமது கொள்கை ஸத்யத்திலிருந்து நழுவக்கூடாது, அஹிம்ஸையே உயர்ந்த தர்மம் என்பவைகள் நமது வைதிகமதத்தின் அடிப்படைத் தத்துவங்கள். இக்கருத்துக்களைத்தான் ஓர் ஆசார்யர் தன் சிஷ்யனுக்கு உபதேசிக்கிறார். இதை முக்கியமாகக் கொண்டுதான் பகவதவதாரங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 'ஸத்ய வாக்யன்' எனப்பட்ட ஸ்ரீ ராமபிரானும் ஸத்யத்தைக் காப்பாற்றவே பல கஷ்டங்களை யனுபவிக்க நேரிட்டது. தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவேதான் தர்மக்ஷேத்திரத்தில் மஹா பாரதப் போர் நிகழ்ந்தது. பெரும் படைசூழ்ந்திருந்த போதிலும் கௌரவர்கள் ஜயிக்க முடியவில்லை. தர்மமே தலைகாக்கும் என்றபடி சிறுபான்மையோராகிய பாண்டவர்களே வெற்றி பெற்றனர். இம்மாதிரியே புராணங்களில் உள்ள பல கதைகளும் செய்திகளும் தர்ம நெறியை உலகுக்குப்புகட்டவே முயற்சித்திருக்கின்றன. அற்ப விஷயமாயினும், பெரிய கார்யங்களாயினும் அறத்தை நிலை நிறுத்தவே முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது திண்ணம். 'அறஞ்செய விரும்பு' என்ற மூதுரையில் காணப்படும் அறமும், ஸத்யத்தை அடிப்படையாகக் கொண்டதுதான். ஸத்யத்தைக்காட்டிலும் உயர்ந்ததில்லை. ஸத்யத்திலிருந்து நழுவுவது பிழை, என்றெல்லாம் வேத வாக்யங்கள் கோஷமிடுகின்றன. ஸத்யத்திலேயேதான் ஸர்வமும் அடங்கியிருக்கின்றன.

'பொய்யாமை யன்ன புகழில்லை; எய்யாமை
எல்லா அறமும் தரும்'

(ஒருவனுக்கு இம்மை மறுமைப் பயன்களாகிய புகழையும் அறத்தையும் முறையே வருந்தாமல் அளிக்கவல்லது பொய் பேசாமை ஒன்றேயாம்,) என்றும்;

'அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்' (ஒருவனுக்கு மனம் பரிசுத்தப்படுதல்

உண்மை பேசுதலால் உண்டாகும்.) என்றும், ஸத்யத்தின் அவச்யத்தைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதையும் நாம் பண்டை இலக்கியங்களில் படிக்கிறோம்.

உலகில் நமக்கு எம்மாதிரியான இடுக்கண்கள் தோன்றினாலும், ஸத்யத்திலிருந்து நழுவாமல் இருந்தால், முடிவில் புகழும், மனத்தூய்மையும் அதன் காரணமாய் தனிப்பட்ட ஸந்தோஷமும் உண்டாகிறது. இந்நிலையில் மனிதன் நற்காரியங்களில் முயற்சிக்கிறான். இம்மையிலும், மறுமையிலும் நற்கதியையும் அடைகிறான். இக்காரணங்களால்தான் **'सत्यान्नपरं किंचित्'** என்றது போன்ற உயர்ந்த வாக்யங்கள் தோன்றின.

* * * * * * * * * *

ஸ்ரீ அஹோபிலத்தில் ப்ரஹ்மோத்ஸவம்

ஸ்ரீமதஹோபிலமடத்தின் ப்ரதான தேவதையான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் சிங்கவேழ் குன்றத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதை நாம் நன்கு அறிவோம். அவ்விடத்திற்குத்தான் ஸ்ரீ அஹோபிலம்எனப் பெயர். இந்த புனிதமான க்ஷேத்ரத்தில் தான் 'ஒன்பதுருவாம்' நரசிங்கன் தனித்தனியாக ஸேவை ஸாதிக்கும் அழகை நேரில் கண்டு களித்தவர்களே தான் உணர்வர்.

கீழ் அஹோபிலத்தில் ப்ரஹ்லாத வரதனுக்கு விசேஷமான ஓர் பெரிய ஆலயம் அமைந்துள்ளது. மேல் அஹோபிலத்தில் ஸ்ரீ அஹோபில ந்ருஸிம்ஹன் ஒரு அழகிய கோயிலில் ஸேவை ஸாதிக்கிறான். மற்றும் உள்ள ஸ்ரீ ந்ருஸிம்ஹ மூர்த்திகளும் தனிக் கோயில்களில் ஸேவை ஸாதிக்கின்றனர்.

இப்புனித க்ஷேத்ரங்களில் சென்ற 8-3-54 முதல் 21-3-54 முடிய வார்ஷிக ப்ரஹ்மோத்ஸவம் நடைபெற்றது. ஸ்ரீமதழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் தகுந்த அதிகாரிகள் முன்னதாகவே அங்கு சென்று யாத்ரீகர்கள் ஸௌகர்யத்திற்காகவும், உத்ஸவத்தை செவ்வனே நடத்தவும் வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தனர். உத்ஸவங்கள் வெகு விமர்சையாக நடந்ததை மிகவும் ஸந்தோஷத்துடன் கேள்விப்படுகிறோம்.

இவ்வர்ஷ உத்ஸவத்தில் இரண்டு விஷயங்கள் மிகவும் குறிப்பிடத் தக்கவை. சென்னையில் உள்ள பல ஆஸ்திக வைஶ்ய ப்ரமுகர்கள் ப்ரஹ்லாத வரதனுக்கு ஓர் உயர்ந்த வெள்ளிக் கவசத்தை ஸமர்ப்பிவித்திருக்கிறார்கள். ஸ்ரீமதழகியசிங்கரின் நியமனத்தை சிரஸாவஹித்து ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்பிடக் கூடியதும், அழகிய சித்ரவேலைப்பாடுகளுடன் கூடியதுமான இக்கவசத்தை அணிவித்த பிறகு ப்ரஹ்லாத வரதனின் தேஜோ விசேஷம் முன்னிலும் பன்மடங்கு ப்ரகாசம் உள்ளதாக பக்தர்களைக் கவர்ந்திருக்கிறதென்றால் பக்தர்களின் இப்பேர்ப்பட்ட பாக்ய விசேஷத்திற்குக் காரணமாயிருந்தது அவ்வுயர்ந்த கவசமா அதைத் தயாரிப்பதில் ஈடுபட்ட பக்தர்களின் மனோபாவமா என்ற ஸந்தேஹம் நமக்கு ஜனிக்கிறது.

மற்றொரு முக்யமான அம்சம், அவ்வுத்ஸவத்திற்கு பல ப்ரமுகர்களும், ஆந்திர மந்த்ரி ஸ்ரீ திம்மாரெட்டிகாரு முதலியவர்களும் ஸந்நிஹிதர்களாக விருந்து உத்ஸவத்தை நன்கு நடத்துவதற்கு உதவியதே. ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் உத்ஸவத்தை கண்டு களிக்கக் கூடியிருந்த பல ஆந்திர பக்தர்களின் கூட்டத்தில் ஸ்ரீ திம்மாரெட்டிகாரு ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஏற்பாடுகளைப் பற்றி புகழ்ந்து கூறியதாகக் கேள்விப்படுகிறோம்.

ஆந்திரர்கள் பகவானின் பல உருவங்களில் ஈடுபட்டு, பல புண்ய க்ஷேத்ரங்களை தரிசித்த போதிலும், சென்னை ராஜ்யத்தில் உள்ளவர்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹனின் திவ்ய மங்கள விக்ரஹத்திலும், திவ்ய க்ஷேத்திரத்திலும் அதிக பக்தியுடையவர்கள் என்றும், விசேஷமாக ஸ்ரீ அஹோபிலமடாதிபதி தக்காலம் 24 மணி நேரமும் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தின் முன்னேற்றத்திலேயே ஈடுபட்டிருப்பதாயும், அதற்காக ஸ்ரீமதழகியசிங்கரும், ஆந்திர ஸர்காரும் தம்மாலியன்ற உதவிகளைச் செய்வார்கள் என்றும் ஸ்ரீ திம்மாரெட்டி அங்கு கூடியிருந்த பக்தர்களுக்கு எடுத்துரைத்தார் என்பதை நாம் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

இதற்கு முன்பே இந்த திவ்ய தேசத்தின் முன்னேற்றத்திற்காக ஸ்ரீ மதழகியசிங்கர் பெரு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இதே போல் ஆந்திர அரசாங்கமும் கூடிய உதவியை செய்தே தருவார்கள் என்று நாம் எண்ணுவதற்கு இடமுண்டு. ஸ்ரீ ந்ருஸிம்ஹ பக்தர்களுடைய பக்தியும், பாக்யமுமே இந்நிலையை உண்டாக்கி இருக்கிறது.

* * * * * * * * * *

'अहिंसा परमो धर्मः' என்றபடி உலக ஸமாதானத்திற்குப் பாடுபடுவதே நமது முக்கிய

உலகப்போக்கு

கொள்கை. ஆனால் தாத்காலிக பலனை உத்தேசித்து உலக அரசுகள் ராணுவ உடன்படிக்கைகளும், ராணுவபலப் பெருக்கும் செய்து கொள்வதில் மும்முரமாய் தங்கள் முழு பலத்தையும் செலவு செய்கின்றன. சில விடங்களில் சுயநலக்காரர்கள், தங்கள் கருத்துக்களை இதரர்கள் பேரிலும் திணிக்க முற்படுவதையும் அதனால் சச்சரவுகள் ஏற்படுவதையும் நாம் கேட்டு கஷ்டப்படுகிறோம்.

இதுவரை ஸமாதானத்திற்கே உழைத்து வரும் நம் பாரதநாடு உலக அரசியலரங்கில் மதிப்பிற்குரிய ஸ்தானத்தையே வஹித்து வந்திருக்கிறது. நம் நாட்டில் உள்ள பல பிரிவு ராஜ்யங்களிலும் இதுவரை அமைதியின்மை ஏற்படாமல் இருப்பதற்குத் தகுந்த சூழ்நிலை காணப்பட்டது. ஆனால்சிலவிடங்களில்ராஜீயப் போக்கில் புதிய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனபோதிலும் அமைதியைக் குலைக்கக்கூடிய நிலை ஏற்படவில்லை. இது மகிழ்ச்சிக்குரிய ஸம்பவமே. ஸ்திரமான ஜனநாயக ஆட்சிகளை ஏற்படுத்த எல்லா விடங்களிலும் இதுவரை வெற்றிகரமான முயற்சிகளே காணப்படுகின்றன. '**भयकृत्भयनाशनः**' என்று பகவானுடைய நாமங்களுக்கு ஏற்ப நெருக்கடி நிலைமைகளும் பகவததீனம் ஆவது போல், சூர்யனைக் கண்டு பனி விலகுவது போல, பகவதநுகூலத்தாலேயே நமக்கு பயநாசநமும் ஏற்படும் என்று நாம் நம்புவோமாக.

* * * * * * * * * *

மொழிப்பிரச்னை நமது கவலை

பற்பல வாண்டுகளாக நமது வைதிகமொழி வடமொழியாகவே இருந்து வருகிறது. உலக சரித்ர விமர்சகர்களும் ஸம்ஸ்க்ருதத்திற்கு ஓர் புராதனகாலத்தையும், உயர்ந்த நிலையையும் இன்றுகூட ஒப்புக் கொண்டு வருகிறார்கள். ஸம்ஸ்க்ருத மொழியில்லாமல் நாம் நமது வைதிக கடமைகளைச் செய்யவே இயலாது. ஸம்ஸ்க்ருத மொழியில் பயிற்சியோ, பழக்கத்தினால் ஏற்பட்ட ஜ்ஞானமோ இல்லாமல் நம் சிறுவர்கள் தங்களுக் கென்று ஏற்பட்ட வைதிக கர்மாக்களைச் செய்யவே இயலாது. தவிரவும் ஸம்ஸ்க்ருத மொழிப் பயிற்சியின்றி மேற்படி இலக்கியங்களையோ, உயர்ந்த கோட்பாடுகளை உடைய பற்பல ஶாஸ்த்ரங்களையோ நம் சிறுவர்கள் படிக்க முடியாது. சுருங்கக் கூறின் ஸம்ஸ்க்ருத மொழி புறக்கணிக்கப்பட்டால் நம்முடைய மதப் பற்றும் அறிவும் மறைந்துபோகும் என்பதில் ஐயமில்லை. அறிவின் பொருட்டே கல்வி கற்கப்பட்ட காலத்திலும், இந்நாட்டு மன்னர்களின் ஆதரவு இருந்த காலத்திலும் ஸம்ஸ்க்ருத மொழி, இலக்கிய அறிவு அளவு கடந்து அதிகரித்திருந்தது. நமது காலக் குறைவினால் ஸம்ஸ்க்ருத பாஷாபி விருத்திக்கு இடையூறுகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. ஊன்றி நோக்கினால் ஸம்ஸ்க்ருத மொழிப் பயிற்சியே நமது ஸமூஹத்திலிருந்து மறைந்துகூடப் போகுமோ எனத் தோன்றுகிறது. இந்நிலை ஏற்பட்டால் நமது வைதிக மதமும் அழிந்ததாகவே கொள்ளலாம். இம்மாதிரியான அழிவு ஏற்படாதென்பது திண்ணம். ஆயினும் வைதிக மதம் குறைவு படுவதற்கு மேலும் நாம் இடங்கொடுத்தலாகாதல்லவா. எப்படியாயினும் வைதிகம் நிலைத்திருக்கவும், அதன் பொருட்டு ஸம்ஸ்க்ருத மொழி பயிற்சி நீடித்திருக்கவும் நாம் பாடுபடவேண்டியது அவச்யம்.

ஸமீபத்தில் மொழி ஸம்பந்தமாக நம் நாட்டில் தாய் மொழி, ஹிந்தி பயிற்சி இவைகள் ஸம்பந்தமாய் காணப்படும் ஆதரவில் ஸம்ஸ்க்ருத பயிற்சிக்கு ஆதரவு குன்றக்கூடிய வித்துக்கள் தோன்றுகிறது. அதாவது—தாய் மொழியும், ஹிந்தியும் அவசியம் கற்றல்வேண்டும் என்ற நிலையில், பல மொழிகளைக் கற்பது கடினம் என்றும் ஒருசாரார் பிரசாரம் செய்யும் பொழுது வேறு மொழிகளுக்கு அவகாசம் எங்கே ஏற்படப்போகிறது. ஏற்கனவேயே ஸம்ஸ்க்ருத படிப்பில் அரசாங்கத்தின் ஆதரவுக் குறைவு காரணமாக நமது சிறுவர்கள் அம்மொழி பயிற்சியிலேயே ஊக்கம் குன்றினவர்களாகக் காணப்படுகின்றனர். நம் நாட்டின் தத்கால நிலையில் வைதிகப் பற்றுள்ளோருக்கே அரசியல் வழிகளில் உத்யோகம் எவ்வளவு ஸுலபமாகக் கிடைக்கும் என்பதையே நாம் நன்கு யோசித்துப் பார்த்தல் வேண்டும். இதற்காக வைதிகப்பற்றையே விடவும் சிலர் துணிகிறார்கள் என்றால் இது அவர்களுடைய ப்ராரப்தகர்மத்தினால் ஏற்படுவதுதான். இதனால் அவர்களுடைய வாழ்க்கை எப்படிக் குலைந்து போகும் என்று எண்ணினார்களில்லை.

ஸம்ஸ்க்ருதமொழிப்பயிற்சியுடன், மற்றைய பாடங்களையும் கற்று, மற்றைய மாணவர்களுடன் அநேகமான ஸமநிலையில் இருப்ப

தற்காக நமது அரசாங்கம் சென்ற வர்ஷத்தில் கீழ் திசைக் கல்வி திட்டத்தில் ஏற்படுத்தியுள்ள சீர்திருத்தங்கள் கொண்டாடத்தக்கவைகளே. இம்மாதிரி கல்வி நிலையங்களிலாவது ஸம்ஸ்க்ருத மொழிப்பயிற்சி குன்றாது நடைபெறும் என்று அதிகாரிகளும், மேற்படி திட்டத்தை தயாரித்த பெரியோர்களும் எண்ணினார்கள். இதை நம் நாட்டிலுள்ளோருக்கு நன்கு எடுத்துரைக்கவும், அதன் மூலமாய் ஸம்ஸ்க்ருத மொழிப்பயிற்சி வ்ருத்தியடையவும் தகுந்த ஏற்பாடுகளை அதிகாரிகளும் ஸம்ஸ்க்ருத அபிமானிகளும் செய்தே தீரவேண்டும். உடனே செய்யவும் வேண்டும். வடநாட்டில் இந்நிலையை நன்கு உணர்ந்த பெரியோர்கள் அனேகர். தென்னாட்டிலும் பலருண்டு. ஆயினும் பொது மக்கள் நன்கு அறிந்துக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை. இதைச் சரிசெய்ய வேண்டிய பொறுப்பு நம்முடையதே. பெற்றோர்களும் வேண்டிய ஊக்கம் எடுத்துக்கொண்டு, விஷயங்களை நன்கு விசாரித்துத் தெரிந்துகொண்டு கீழ் திசை கல்வி போதனா கலாசாலைகளை நமது நாட்டில் பல விடங்களில் ஏற்படுத்திக்கொண்டு பிள்ளைகளுக்கு இம்மொழிப்பயிற்சியும், இலக்கியப்பயிற்சியும்கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்! என நாம் பற்பலமுறை எடுத்து விண்ணப்பித்துக் கொண்டோம்.

உடனே இம்மொழிப்பயிற்சிக்கு புத்துயிர் அளிக்காமற் போனால் நாம் நமது வைதிக மதத்தையே கூடிய சீக்கிரத்தில் இழப்போம் என்பதில் ஐயமில்லை. ஆத்மஜ்ஞாநம் இன்றி ஶரீரபோஷணத்திலேயே உழண்டபின் மேன்மையுள்ள நாகரீகத்தையும் இழப்போம். இந்நிலையைத் தடுக்க இன்றே முயற்சித்தல் அவச்யம்.

श्रीः

श्रीमते श्रीलक्ष्मीनृसिंह परब्रह्मणे नमः

அட்டைப்படம்

'அலர்மேல் மங்கையுறை மார்பன்'

[திருக்] கல்யாணபுரம்

தஞ்சாவூர்

கங்கையிற் புனிதமாய காவிரிக்கும் அதன் உபநதியான குடமுருட்டிக்கும் நடுவே அமைந்திருப்பது கல்யாணபுரம் எனப்பட்ட அக்ரஹாரம்.

'பிண்டியார் மண்டையேந்தித் திறந்தமுண்டியான் சாபந்தீர்த்த' அரன் சாபஹரனின் அபிமாநம் பெற்ற ப்ராசீன ஆலயத்தில் கல்யாணபுர அக்ரஹாரத்தில்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸப் பெருமாள் **'कलौ वेङ्कटनायकः'** என்றபடி ப்ரத்யக்ஷ வரப்ரஸாதியாக ஸேவை ஸாதிக்கிறான். வர்ஷத்தில் பல உத்ஸவங்களைக் கண்டருளும் ஸ்ரீநிவாஸனுக்கு பங்குனி திருவோண நன்னாளில் **(30-3-54)** ப்ரஹ்மோத்ஸவம் தொடங்கி நான்காம் உத்ஸவமாக கருடோத்ஸவமும், ஒன்பதாம் நாள் திருத்தேருத்ஸவமும், பன்னிரண்டாவது நாள் புஷ்பப் பல்லக்கும் விசேஷமான பாராயண, உபந்யாஸாதிகளுடன் **(10-4-54)** ல் பூர்த்தியடைந்தன.

ஸ்ரீ அஹோபிலமடம் [முகாம்]

ஸ்ரீமதழகியசிங்கர் பட்டாம்பியில் எழுந்தருளியிருந்த காலத்தில் கள்ளிக்கோட்டை ப்ராஹ்மண ஸமூக பிரஸிடெண்டு S. பரமசிவமய்யர் [ஆடிடர்] விசேஷ காணிக்கை ஸமர்ப்பித்து ஆராதித்தார். பள்ளிபுரத்தில் ஸ்ரீ P. V. ஈச்வரஅய்யர். M. O. L, L. T. சிறு பசங்களை ஸஹஸ்ரநாமம் சொல்லிப் பழக்கி வைத்ததை உகந்து படிப்புமட்டும் பிரயோஜனமில்லை என்றும், சொல்லிவைக்கும் அவர் உள்பட கிராப் முதலிய துராசாரங்களை விட்டு, ஸதாசாரங்களுடன் இருக்கும்படியும் ஸாதித்தாயிற்று அத்துடன் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளப்படி புதுக் கல்வித்திட்டத்தையும் விளக்கி அந்த மாதிரி ஊரில் பள்ளிக்கூடம் அமைக்க வசதியிருப்பதால் அந்தப்படி வைக்கவேணுமென்று ஸாதித்தாயிற்று. நியமனப்படி நடக்கிறதாக அவர்கள் ஸ்ரீ ஸன்னிதியில் விஜ்ஞாபித்தார்கள். மற்றபடி ஸ்ரீ அழகியசிங்கர் பள்ளிபுரத்தில் எழுந்தருளியிருக்கும்போது சாமுபட்டர் பார்யை முதலான வயதான ஸ்திரீகள் உள்பட தெய்வத்தினிடத்திலும் மடத்தினிடத்திலும் விச்வாஸமுள்ளவர்களாக ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்தித்து திருவிலச்சினை பெற்றுக்கொண்டார்கள். மற்ற புருஷர்கள் ஸ்ரீ அழகியசிங்கர் கிராப் முதலிய துராசாரத்தைப் பற்றி ஸாதித்த அம்சங்களை ஒப்புக்கொண்டு கூடிய சீக்கிரம் துராசாரத்தை விடுவதாக ஸ்ரீ ஸந்நிதியில் விஜ்ஞாபித்தார்கள். பரிபக்வமான மனது உடைய சிலர் உடனே கிராப்பை எடுத்துக்கொண்டு ஸமாச்ரயணம் செய்து கொண்டார்கள், ஏற்கனவே பெரியஅழகியசிங்கர் ஸந்நிதியில் ஆச்ரயித்த ஸ்ரீ ஈச்வரஐயர் ஸ்ரீரங்கஐயர் ஸ்ரீலக்ஷ்மீநாராயணஐயர் முதலானவர்கள் சௌகரியப்பட்ட இடத்தில் ஸ்ரீமதழகியசிங்கரையும் பெருமாளையும் தெண்டன் ஸமர்ப்பித்து விட்டு மலையாளத்தை விட்டு ஸ்ரீமதழகிய சிங்கர் எழுந்தருளும்வரை முடிந்த இடங்களில் வந்து தெண்டன் ஸமர்ப்பிப்பதாக விஜ்ஞாபித்தார்கள். மலையாளத்தில் அவ்வவ்விடங்களில் எல்லாவருணத்தாரும் புருஷர்கள், குழந்தை, ஸ்திரீகள் உள்பட உத்ஸாஹமாக ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருக்கும் இடங்களில் நமஸ்கரித்து தரிசனம் செய்துப் போகிறார்கள். ஒரு மணி நேரம்கூட ஓய்வில்லாமல் ராத்திரி ஸஞ்சாரம் வரையில் தரிசித்துப்போய்க்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் அவர்களுடைய பக்தியை மெச்சி திருமேனியின் சிரமத்தைப் பாராமல் அவர்களை குசலப்ரச்சனம்பண்ணியாகிறது, ராமஸ்வாமிஐயங்கார்

ஓர் அறிவிப்பு

ஸ்ரீமான், உப, முகுந்தகிரி V, வரதாசாரியர் ஸ்வாமி பம்பாய் ராஜதானியில் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவிற்கு கௌரவ ஏஜெண்டாக 1950 ல் நியமிக்கப்பட்டார். வழக்கம்போல் ஷை ஸ்வாமியிடம் பம்பாய் சந்தாதாரர்கள் தங்கள் சந்தா பாக்கியைச் செலுத்தும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். பாக்கி ஜாபிதா அவரிடம் அனுப்பப்பட்டிருக்கிறது.

குறிப்பு:—ஏஜண்டு மூலமாகவோ, நேராகவோ பணம் செலுத்தும் சந்தாதாரர்கள் யாவரும் பணம் செலுத்திய ஒரு மாதத்திற்குள் ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஆபீஸிலிருந்து ரசீது பெற்றுக்கொள்ளாவிடில் உடனே ஆபீஸுக்குத் தெரிவிக்கவேணும். பணம் அனுப்பும்போது சந்தா நம்பரை மறவாமல் அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மானேஜர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஏஜெண்டின் விலாஸம்.

Sri M. V. வரதாசாரியர். B. A.
61, கோட் பந்தர் ரோடு,
ஜோகேஸ்வரி போஸ்டாபீஸ், பம்பாய்.

களுக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்றன.

புத்ரன்:—நீங்கள் சொல்லும் விஷயங்கள் மனத்திற்படுகின்றன. ஆயினும் உலகஸ்ருஷ்டியைப் பற்றி நீங்கள் கூறியதை விளக்கமாக எனக்கு உபதேசிக்கவேண்டுகிறேன்.

பிதா:—பலவித ரூபங்களுடனும், பல மாறுபட்ட பெயர்களுடனும்உள்ள இவ்வுலகம்ஸ்ருஷ்டிக்கு முன் ஒன்றான ரூபம் பெயர் இவைகளுடன் கூடினதாகவே இருந்தது. அதற்குத்தான் 'ஸத்' அல்லது 'நியமிக்கிறவன்' என்று வ்யவஹாரம் [பெயர்.]

புத்ரன்:—ஸத் என்கிற நியமிக்கிறவன் எப்படி இப்பொழுது காணப்படும் விசித்ர ரூபமுள்ள உலகமாக மாற முடிந்தது?

பிதா:—ஸத்துக்கு ஸந்தோஷமுண்டு. ஸந்தோஷ மேற்பட்டால் நாம் விளையாட்டாக காலத்தைக் கழிக்கிறோமல்லவா. அம்மாதிரியான லீலையில் அந்த ஸத் விசித்ரமாயும், அநந்தமாயும், சேதநாசேதநங்கள் கலந்த உலக ரூபமாக [பஹுவாக] ஆகக்கடவேன்' என்று ஸங்கல்பித்துக் கொண்டது.

புத்ரன்:— அந்தமாதிரி ஸங்கல்பத்தினால் தானா நாம் காணும் உலகம் இப்படியே உண்டாயிற்று?

பிதா:—உலகம் முதலில் இம்மாதிரி உண்டாக வில்லை. முதலில் தேஜஸ், [காந்தி,] அப் [ஜலம்,] அந்நம் இவைகளாக ஸங்கல்பித்துக்கொண்டது. அதாவது—முதலில்இவைகளை ஸ்ருஷ்டித்தது. இவைகளுக்கு தேவதைகள் எனப்பெயர். அதாவது — இவைகளுக்கு அபிமானிதேவதைகள் உண்டு. அவைகளைத்தான் கூறுகிறேன்.

புத்ரன்:—இவைகளும், ஸத் என்கிற நியமிக்கிறவனும் ஒன்றே என்பது எப்படி?

பிதா:—'தேஜஸ், அப், அந்நம் ஆகிய தேவதைகளுக்குள்ளும், நான், இந்த ஜீவனைச் சரீரமாகக்கொண்டு, அநுப்ரவேசித்து, பலவிதமான ரூபம், பெயர் இவைகளை அந்த தேஜஸ் முதலியவைகளுக்குச்செய்யக்கடவேன்' என்று அந்த ஸத் ஸங்கல்பித்துக்கொண்டது.

புத்ரன்:—நீங்கள் கூறுவதில் இரண்டுவித ஸ்ருஷ்டிகள் தோன்றுகின்றனவே? அப்படித் தானே?

பிதா:—ஆமாம். முதலில் தேஜஸ் முதலியவைகளின் ஸ்ருஷ்டியை 'ஸமஷ்டி ஸ்ருஷ்டி' என்றும், பிறகு ஸங்கல்பத்தால் ஏற்படும் ஸ்ருஷ்டியை 'வ்யஷ்டி ஸ்ருஷ்டி' என்றும் கூறுவது வழக்கம்.

புத்ரன்:—இதனால் ஸகல அசேதனங்களின் ஸமுதாயத்துக்கும் ப்ரஹ்மம் காரணம் என்று புலப்படுகிறது. இதேபோல்தானா சேதநர்கள் விஷயத்திலும்?

பிதா:—ஆம். முதலில் இந்தசேதனர்களெல்லாம் [ஜீவன்களெல்லாம்] 'ஸத்' எனப்படும் ப்ரஹ்மத்தினிடம் சேர்ந்திருக்கின்றன. ஜீவன்களுடன் கூடிய இந்த ஜகத் முழுமையும் 'ஸத்' என்கிற ப்ரஹ்மத்தின் அதீநமான உற்பத்தி, லயம், ஆதாரம் இவைகளையுடையது. ஆகையால் இந்த ஜகத் ப்ரஹ்மத்தின் ஶரீரத்தைப் போன்றது.

புத்ரன்:—ஜகத் ஆரம்பத்தைக் கூறினீரே? முடிவு அப்படியேதானா?

பிதா:—பிள்ளாய்! அதுவும் இதேமாதிரி தான். தேஹ வியோகம் ஏற்பட்டதும், இந்த ஜீவன் முன்போலவே 'ஸத்'தை அடைகிறான்.

புத்ரன்:—பிதாவே! ஜீவன் என்று ஒன்றைச் சொன்னீர்கள் பிறகு ஜீவன்கள் ஸத்தில் இருந்தன பிறிந்தன மறுபடியும் சேர்ந்தன என்றீர்கள். அப்படியாயின் 'ஸத்' என்பதற்கும், ஜீவனுக்கும் என்ன தொடர்பு?

பிதா:—பையனே! ஜீவனுடன் கூடிய ஜகத் முழுவதும் 'ஸத்' என்பதையே ஆத்மாவாக உடையது. இதுதான் உண்மை. 'நீயும் அதுதான்'.

புத்ரன்:— 'அது' என்பது 'ஸத்'தைக் குறிக்கிறது. அதேபோல் 'நீ' என்பது யாரைக் குறிக்கிறது?

பிதா:—'நீ' என்பது உன் ஶரீரத்தையும் அதாவது – உனக்கு விலக்ஷணமான ரூபம், பெயர், ஜீவன் இவர்களையும் அவைகளுக்கும் ஆத்மாவான 'ஸத்'தையும் குறிக்கிறது. இதனால் 'நீ' என்பது 'அது' என்ற 'ஸத்'தையும் குறிக்குமல்லவா?

புத்ரன்: — அப்பா! தாங்கள் முதலில் கேட்டீர்களே, 'எந்த ஒன்றைத் தெரிந்து கொண்டால் மற்றெல்லாம் தெரிந்து கொண்டதாக ஆகிறது' என்று, அது நன்கு விளங்குகிறது. உலகில் காணப்படும் எல்லாம் 'சரீரம்.' 'ஸத்' எனப்படும் பகவான் 'சரீரி.' தங்களுடைய அனுக்ரஹத்தினால் அடியேன் உயர்ந்த தத்துவங்களை உணர்ந்துகொண்டேன். [ஸாஷ்டாங்கமாகப்பன்முறை தகப்பனாரை நமஸ்கரிக்கிறான்.]

ஸ்ரீ:

'நீயும் அதுதான்'

முற்காலத்தில் அருணனுக்கு உத்தாலகர் என்ற குமாரர் இருந்தார். உத்தாலகருக்கு ஸ்வேதகேது என்ற புத்ரர் உண்டானார். பிறந்த எட்டாவது ப்ராயத்தில் ப்ராஹ்மணனுக்கு உபநயநம் செய்விக்கவேண்டும் என்று ஸாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அப்படியிருப்பினும் ஸ்வேதகேதுவுக்கு பன்னிரண்டு வயதாகியும் (ஏதோ ப்ராரப்தத்தினால்) உபநயநம் ஆகவில்லை. இதைப் பார்த்த பிதா வருந்தினார். ஒரு நாள் புத்ரனைக் கூப்பிட்டு, 'ஹே ஸ்வேதகேது! உனக்கு வயது அதிகமாகிவிட்டது, ஓர் தகுதியான குருவைத் தேடி அவரிடம் உபநயநம் செய்துகொண்டு, ப்ரஹ்மசர்யத்துடன், அத்யயநம் செய்துவா' என்றார். ஸ்வேதகேதுவும் அப்படியே, ஓர் தகுந்த குருவினிடம் சென்று பன்னிரண்டு வர்ஷ காலம் அத்யயநம் செய்துவிட்டு, தன்னுடைய இருபத்து நான்காவது வயதில் தன் பிதாவினிடம் வந்து சேர்ந்தான். பிதாவும் ஸந்தோஷித்தார். தன் பிள்ளையை பூர்ணமாக நல்வழிக்குக் கொண்டுவர ஜ்ஞாநோபதேசம் செய்ய விரும்பினார். ஆதலால் பிள்ளையுடன் ஸம்பாஷிக்கலானார்.

(பிதாவுக்கும், புத்ரனுக்கும் கீழ்கண்ட ஸம்பாஷணை நடந்தது.]

பிதா:—ஹே ஸ்வேதகேது! நீ நன்கு கற்றவனாகத் தோன்றுகிறாய். நான் ஒரு கேள்வி கேட்கலாமோ?

புத்ரன்:—[தனக்குள்] நாம் தான் பூர்ணமாக அத்யயநம் செய்திருக்கிறோமே. நமக்குத் தெரியாததாக என்ன கேட்க முடியும். [வெளிப்படையாக] பிதாவே! உங்களிஷ்டப்படியே கேட்கலாம். விடை தருவேன்.

பிதா:—எதைக் கேட்டால் கேட்கப்படாததெல்லாம் கேட்கப் பட்டதாகிவிடுமோ, எதை சிந்தனை செய்தால் [மநநம் செய்தால்] சிந்தனை செய்யப்படாததெல்லாம் சிந்தனை செய்யப்பட்டதாகி விடுமோ, எதை நன்கு த்யானித்தால் [நிதித்யாஸித்தால்] த்யானிக்கப்படாததெல்லாம் த்யானிக்கப்பட்டதாகி விடுமோ, அம்மாதிரியான 'நியமிக்கிற புருஷனை' [ஆதேசத்தை] நீ கேட்டிருக்கிறாயா?

இதைக் கேட்ட ஸ்வேதகேதுவுக்கு மனத்தில் சஞ்சலம் உண்டாகிவிட்டது. ஒரு வஸ்துவை அறிந்தால் உலகில் உள்ள எல்லா வஸ்துக்களையும் எப்படி அறிந்ததாக முடியும், என்று ஸந்தேகப்பட்டான். ஆனாலும் தகப்பனாரின் வார்த்தைகளை பிழையென்று எண்ணவும் முடியவில்லை. தனக்குத் தெரியவில்லை என்றால், பன்னிரண்டு வர்ஷங்கள் குருகுலவாஸஞ் செய்தும் பயனில்லை என்று தன்னை மறுபடியும் குருகுலத்திற்கு அனுப்பி விட்டால் என்ன செய்வது. தனக்கோ வயது இருபத்து நான்கு. இவ்விதம் எண்ணியவனாய் கீழ்க்கண்ட பதிலைத் தந்தான்.

புத்ரன்:—மதிப்பிற்குரிய பிதாவே! தங்களுடைய கேள்விக்குரிய பதிலை என் குருவே அறியமாட்டார் போலும். அறிந்திருந்தால் எனக்கு உபதேசியாமல் இரார். ஆதலின் தாங்களே எனக்கு உபதேசித்தருள்வீராக.

பிதா:—ஸௌம்ய! பூர்வத்தில் [முதலில்] 'ஸத், எனப்பட்ட, ப்ரஹ்மம்' தான் இருந்தது. அது தனிப்பட்டதாகவும், மற்றொன்றுடன் கூடாததாகவும் இருந்தது. பிறகு அந்த ஸத்தினிடத்திலிருந்து ஸர்வலோகமும் உண்டாயிற்று.

புத்ரன்:—அது எப்படி?

பிதா:—உலகத்தில் மண் கட்டியிலிருந்து குடம், மடக்கு, வாணாய் முதலிய ஸாமான்களை குயவன் செய்கிறான். தங்கக் கட்டியிலிருந்து வளை, சங்கிலி, ஒட்டியாணம் முதலிய ஆபரணங்களை தட்டான் செய்கிறான். மண் பாத்திரங்கள் உடைந்தால், அவைகளை ஏதோ மண்தானே, என்று உதாஸீனமாக நாம் கூறவில்லையா. அதேபோல் ஒருவித சங்கிலியைக் கேட்கும் ஸ்த்ரீக்கு வேறுவித ஆபரணம் கிடைத்தால், அதுவும் தங்கம் தானே என்று த்ருப்தி செய்து கொள்ளுகிறாள் அல்லவா. அதேபோல்தான் எல்லாம்.

புத்ரன்:—அது எப்படியாகும். வேறுவேறு வஸ்துக்களாகவல்லவா தோன்றுகின்றன.

பிதா:—அப்படி நீ நினைப்பது தவறு. மண் பாண்டங்களுக்குப் பொதுவான காரணம் மண். தங்க ஸாமான்களுக்கு தங்கம். வ்யவஹாரத்தில் புரிந்து கொள்வதற்காக வேறு வேறு உருவங்களும், பெயர்களும் அவை

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

விளக்குகள் ப்ரகாசமாய் எரிந்துகொண்டிருக்க அப்பெண் உத்தமமான படுக்கையில் அசையாமல் படுத்திருந்தாள். 'ஸகி, ஸகி, எழுந்திரு. என்ன இப்படித் தூங்குகின்றாய்?, என்றாள். பிறகு கைகளால் தொட்டு அசைத்து எழுப்பினாள். அப்பொழுதும் அவள் விழித்துக்கொள்ளாமலிருப்பதைக் கண்ட நாயகப் பெண்ணுக்கு ஒரு ஸந்தேஹம் உண்டாயிற்று. விழித்திருந்தும் பரிஹாஸத்திற்காகவேண்டும் என்றே தூங்குவது போல்பாசாங்கு செய்கின்றாளோ என்று ஸந்தேஹித்தாள். விளக்கு வெளிச்சத்தில் அவள் முகத்தை உற்று நோக்கினாள். கண்கள் திறவாமல் இறுக மூடியேயிருப்பதற்காக அவள் செய்யும் முயற்சியினால் அவளுடைய அழகிய கண்களின் இமைகளில் உண்டான பலவித அசைவுகள் புலப்பட்டன. விஷயம் புரிந்துவிட்டது. கள்ளத் தூக்கம் அதாவது பொய்த் தூக்கமே அவள் அப்போது தூங்குவது என்பது நிச்சயமாய் ஏற்பட்டது. உடனே 'ஸகி, விளையாடுவதற்கு இதுவா ஸமயம். வ்ரதம் அநுஷ்டிக்கவேண்டிய நல்ல நாளாயிற்றே இது. அந்தந்த காலத்தில் செய்யவேண்டியதைத் தவறாமல் செய்தால் தானே நோன்பு நிறைவேறும். காலையில் நீராடுவது முதல் காரியமாயிற்றே. குளிரென்று பார்க்கலாமோ? ஆறு குளங்களில் காலையில் அவகாஹந ஸ்நாநம் செய்யும்போது குளிர்வதும் அதனால் உடம்பு குன்றுவதும் இயற்கை. தர்மாநுஷ்டாநம் செய்பவர்கள் அதையெல்லாம் பொறுத்துக்கொள்ளவேண்டும். அதைப் பொறுத்துக்கொள்வது தபஸ் எனப்படும். இப்படி உத்தமமான புண்யகாரியத்தைச் செய்யவேண்டிய இந்தக்காலத்தில் நீ கபடத் தூக்கம் தூங்கி விளையாடுவது தகுமா? அதை விட்டு உடனே எழுந்து வந்து கோஷ்டியில் கலந்துகொள். சீக்கிரம் எழுந்திரு. நாழியாகிவிட்டது' என்றாள். அடுத்த க்ஷணமே அப்பெண் கலகல வென்று சிறித்துக்கொண்டே எழுந்து வந்து தோழிகளுடன் சேர்ந்து புறப்பட்டாள். இங்கு —

'புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்ப் பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம் புக்கார்'

என்று பிரிந்துபோன தோழிகளின் முகமாக பகவதநுபவம் செய்யப்பட்டிருக்கின்றது. 'சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை' என்று ஸ்ரீராமனுடைய குணாதிஶயத்தைக் கீழே பேசினாள்.

'स तु नित्यं प्रशान्तात्मा मृदुपूर्वं च भाषते ।
उच्यमानोऽपि परुषं नोत्तरं प्रतिपद्यते ॥
शतमप्यपकाराणां न स्मरत्यात्मवत्तया'

என்றபடி சாந்தியே உருவெடுத்து வந்ததெனக் கூடிய ஸ்வபாவமுள்ள ஸ்ரீ ராகவன் தன்னைச் சேர்ந்தவரிடத்தில் அபசாரப்படுகின்றவர்விஷயத்தில் தன் ஸ்வபாவத்திற்கு மாறுபட்டதாயினும் கடுஞ்சினம் கொள்ளுகிறானென்று இப்படி அபார கருணையும் தம்முடையவர்களைக் காப்பாற்றுவதிலுள்ள அபிநிவேசமும் போற்றப்பட்டன. பகவந்நிக்ரஹமுண்டானபோது எவ்வளவு ஐச்வர்யம் இருந்தபோதிலும் எவ்வளவு ஸாமர்த்யமிருந்த போதிலும் ஒன்றும் ப்ரயோஜனப்படாதென்பதைக் குறிப்பிடக் கருதி 'தென்னிலங்கைக் கோமான்' என்று ராவணனைக் கூறினாள். இத்தனை பல பராக்ரமங்களிருந்தும் அவை நல்ல கார்யங்களில் உபயோகப்படாமல் அழிவிற்கே காரணமாயினவே என்ற சோகமும் இங்கு தோன்றும். இப்படிப் பல கருத்துக்களைத் தோற்றுவிக்கின்ற இந்த ராவண வர்ணநத்திலிருந்து வேண்டாத ஓர் பொருள் தோன்றக் கூடும். அதாவது வெகு பராக்ரமசாலிகளான கோடி கோடி ராக்ஷஸர்கள் நிறைந்த லங்கா ராஜ்யத்திற்குஅதிபதியாய் இந்திரன்முதலான தேவர்களையெல்லாம் வென்றராவணனை வதம்பண்ணுவதற்காக ஸ்ரீ ராகவன் பெரும் முயற்சி செய்து மிகுந்த க்லேசப்படவேண்டியிருந்ததென்பது. இப்பொருள் தோன்றினால் இது எம்பெருமானுடைய பெருமைக்கு இழிவைத் தரும். அவனுடைய வீர்ய சக்தி தேஜஸ்ஸுக்களைப் பராமர்சித்தால் ராவணனே, அன்று அவனையும் ஒருபூச்சி என்னலாம்படி அவ்வளவு பலிஷ்டர்களான வாலி முதலியவர்கள் என்ன,

முன் ஓர் அவதாரத்தில் மாய்ந்த ஹிரண்யகசிபு முதலானவர்கள் என்ன, அவர்களும் கொசுவோ அதற்கும் சிறிய ஜந்துவோ என்ன வேண்டியவர்களே யன்றோ? ஆகவே இங்கு எம்பெருமானுடைய சக்திவிசேஷத்தை உள்ளபடிவிளக்கவேண்டியது அவச்யமாயிற்று. அதனால் 'பொல்லாவரக்கனைக்கிள்ளிக் களைந்தானை' என்றாள். இந்திரனை ஜயித்தான். குபேரனை ஜயித்தான். மற்ற தேவர்களையும் ஜயித்தான். கைலாஸத்தை அசைத்தான். மூன்று உலகங்களையும் அழ வைத்தான். அவ்வளவு பலமுள்ள பொல்லாத ராக்ஷஸன்தான் ராவணன். ஆனாலென்ன? நாம் ஒரு சிறு துரும்பைக் கிள்ளினால் அதில் நமக்கு எவ்வளவு முயற்சியோ அவ்வளவு முயற்சிதான் ஸ்ரீ ராகவனுக்கு அவனைக்கொன்றதில். இதுவும் நமக்குப் புரியும்படி ஓர் உபமானம் காட்டினதே. உண்மையில் இவ்வளவு யத்னமும் அபேக்ஷிதமன்று என்பது கருத்து.

இனி ப்ரக்ருத க்ருஷ்ணாவதாரச் சிறப்பையே பேசுவதாகக் கருதி 'புள்ளின்வாய் கீண்டானை' என்றாள். 'ஸர்வ உலகங்களுக்கும் பரிபாலகர்களான ஸ்ரீ க்ருஷ்ணனும் பலராமனும் வத்ஸ பாலகர்கள் (கன்று மேய்ப்பவர்கள்) ஆகி மத்யான்ன ஆஹாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு காட்டுக்குப் போய் கன்றுகளை மேய்த்துக்கொண்டு ஸஞ்சரித்தனர். எல்லோரும் அவரவர்களுடைய கன்றுகளுக்குத் தண்ணீர் காட்டுவதற்காக ஒரு மடுவிற்குப் போய் அவற்றுக்குத் தண்ணீர் காட்டிய பிறகு தாமும் பருகினர். அப்போது அங்கு அச்சிறுவர்கள் வஜ்ராயுதத்தினால் தகர்க்கப்பட்ட பர்வதத்தின் ஒரு சிகரமே புரண்டு வந்திருப்பது போன்ற ஒரு பெரும் ப்ராணியைக்கண்டு மிகவும் பயந்து போயினர். பகன் என்று பேருடைய மஹா பலிஷ்டனான அஸுரன் பக (கொக்கு) உருவத்தை யெடுத்துக் கொண்டு அப்படி அங்கே இருந்தான். கூர்மையான மூக்கையுடைய அவன் வெகு வேகமாக வந்து க்ருஷ்ணனை விழுங்கி விட்டான். அப்படி க்ருஷ்ணன் அப் பெரும் பகாஸுரனால் விழுங்கப் பட்டுப் போனதைக் கண்ட பலராமன் முதலிய குழந்தைகள் ப்ராணனில்லாத இந்திரியங்கள் போல் வாடினர். அஸுரன் வாய்க்குள் சென்ற பகவான் தனது ப்ரபாவத்தைச் சிறிது காட்ட ஆரம்பித்தான். மஹாயோகேச்வரனன்றோ அவன். தனது அக்நி அம்சத்தைக் கொஞ்சம் வளரச்செய்தான். அஸுரன் வாயெல்லாம் ஒரே எரிச்சல். அதைத் தாங்கமுடியவில்லை. உடனே க்ருஷ்ணனைக் கக்கிவிட்டான். எவ்வித அபாயமுமில்லாமல் முன்போலவே பரிபூர்ண ரூபனாய் விளங்கும் ஸ்ரீ க்ருஷ்ணனைத் தனது கூரிய மூக்கினால் குத்திக் கொல்வதற்காக வெகு கோபத்தோடு வெகு வேகமாக அவர் மேல் பாய்ந்தான் அஸுரன். அவன் கம்ஸனுடைய தோழன். ஆகையால் அவன் பாய்ந்து அருகில் வந்தவுடனே ஸ்ரீ க்ருஷ்ணன் தனது இரு கைகளாலும் அவனுடைய கீழ்மேல் மூக்குகள் இரண்டையும் பிடித்துக் கோரை நார் கிழிப்பது போல் அவனைக் கிழித்துவிட்டார். தேவர்கள் இதைக் கண்டு மகிழ்ந்தார்கள்' என்று இக்கதை புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அதை யநுஸரித்து 'புள்ளின் வாய் கீண்டானை' என்றாள். 'புள்ளினை வாய் பிளந்திட்டாய்' என்றார் பெரியாழ்வார்.

இப்படி ராமாவதாரச்சிறப்பு ஒன்றும் க்ருஷ்ணாவதாரச் சிறப்பு ஒன்றும் இங்கு பேசப்பட்டன. இவற்றின் வரிசையும் இப்படியே இருக்கவேண்டியது உசிதம். முன் கூறியதோடு ஸம்பந்தப்பட்டதாகையாலும், ராமாவதாரம் முந்தினதாகையாலும் அதைப் பற்றிய விஷயம் முதல் இடம் பெறவேண்டும். ஆகிலும் ராமநாம ஸங்கீர்த்தன ப்ரஸக்தி முன் பாட்டோடு முடிந்து விட்டது. அதில் உண்டான ஒரு தோற்றத்தை விலக்குவதற்காக இங்கு மறுபடியும் ராமனைப் பற்றிப் பேசப்படுகின்றதே தவிர ஸாக்ஷாத் ஸங்கதி யில்லை, மஹாப்ரகரணத்திற்கேற்ற க்ருஷ்ண சரித்ராநுஸந்தானமே ப்ராப்தம் என்று ஸூசநம் செய்வதற்காக க்ருஷ்ணன் விஷயத்தை முதலிலும் ராமன் விஷயத்தை அதன் பிறகும் வைத்துப் பேசினாள்.

14. உங்கள் புழக்கடை

மேல் நடந்து சென்ற பெண்கள் நிச்சலா என்ற பெண்ணின் வீடு வந்ததும் அதன் எதிரில் நின்றனர். இன்னும் எழுந்துவாராத பெண்களில் நிச்சலாவும் ஒருத்தி. ஆகையால் அவளை எழுப்புவதற்காக அங்கு நின்று அவள் வீட்டினருகே சென்றனர். வாசல் கதவு இன்னும் திறக்கவில்லை. உள் பக்கம் தாளிடப்பட்டிருந்தது. உரக்கக்கூவி அழைத்தார்கள். பதில் ஒன்றுமில்லை. கதவைத் 'தட தட' வென்று அடித்தார்கள். கைவலி யுண்டா

யிற்றே யன்றி வேறு பயன் ஒன்றுமில்லை. கதவின் சிறு சந்தினால் ச்ரமப்பட்டு உள்ளே பார்த்தனர். மனிதர் இருப்பதாகவே தெரியவில்லை. நாழியாகின்றது. என்ன செய்வதென்று தோன்றாமல் தவித்தனர். நாயகப் பெண் இப்படியும் அப்படியும் பார்த்தாள். வீட்டின் முன் சுவரின் இரு கோடிகள் வரையில் அவளுடைய பார்வை சென்றது. சரேலென்று ஒருபக்கம் ஓடினாள். அங்குப்பக்கத்து வீட்டுப் பக்கச் சுவர் தனியாகவம், இவ்வீட்டுப் பக்கச் சுவர் தனியாகவும் இருந்து அவற்றின் நடுவில் ஜனங்கள் நடமாடுவதற்கேற்ற சந்து வழி ஒன்றிருப்பது தெரிந்தது. உடனே அவள் 'வீட்டின் முன் பக்கத்தில் தான் ஒருவரும் காணப்படவில்லை, பின் பக்கத்திலாவது யாராவது இருக்கின்றார்களோ வென்று பார்க்கலாம்' என்று தோன்றியபடியால் வேகமாக நடந்து வரும்படி சொல்லித் தோழிகளை அழைத்துக்கொண்டு அச் சந்தின் வழியாகப் பின்பக்கம் வந்தாள். அங்கு வாசற்படி திறந்திருந்ததைக் கண்டு ஸந்தோஷித்துத் தோழிகளுடன் உள்ளே நுழைந்தாள். அவ்விடம் வெகு அழகான ஒரு தோட்டம். அதன் நடுவில் ரமணீயமான நடவாபி ஒன்று. ஆம்பல் செங்கழுநீர் தாமரை இவைகளால் சோபிக்கின்ற தெளிந்த, இனியநீருடையது அந்த வாபி. குப்பை கூளமொன்றுமில்லாமல் பளபள வென்றிருந்த படிகளால் அதன் உள் இறங்கிக் கையால் ஜலத்தைத் தொட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு அங்கிருந்த புஷ்பங்களுடையவும் மொக்குகளுடையவும் அழகை ஒரு க்ஷணம் அநுபவித்து விட்டு அப்பெண்கள் மேலே ஏறிவந்தார்கள். அப்போது அவ்வீட்டுப் பெரியோர்கள் அந்த நடவாபிக்கு வந்துகொண்டிருந்தார்கள். 'என்ன மாமீர், முன்பக்கத்தில் வெகுநாழி கூப்பிட்டுப் பார்த்தோம். கதவே திறக்கவில்லை. உங்கள் பெண் இருக்கின்றாளா? எழுந்து விட்டாளா? அவளை அழைத்துப்போவதற்காகவந்திருக்கின்றோம். நாங்கள் இன்றைக்கு மார்கழி நோன்பு நூற்பதாக ஏற்பாடாகியிருப்பதை அவளே உங்களுக்குச் சொல்லியிருப்பாள்' என்று அவர்களிடம் தாங்கள் வந்த காரியத்தை நாயகப் பெண் தெரிவித்தாள். குறும்புத்தனமுள்ள தங்கள் பெண்ணின் போக்கை அறிந்த அவர்கள் ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு 'உள்ளே தான் இருக்கின்றாள். போய் எழுப்பி அழைத்துப் போங்கள்' என்றார்கள். பெண்கள் நிச்சலாவின் படுக்கை யறைக்குப் போய் நின்று 'நிச்சலா, நிச்சலா' என்று பல தடவை கூப்பிட்டார்கள். பிறகு கதவை இடித்தார்கள். கதவு உள்பக்கம் தாளிட்டிருந்தபடியால் திறக்கவில்லை. இவளும் முன் வீட்டுப்பெண்போல் வேடிக்கைக்காக வேணுமென்றே எழாமல் இருக்கின்றாளோ என்ற ஸந்தேஹமுண்டாயிற்று. அதனால் வெகு நாழி ஆகிவிட்டதென்பதை அவளுக்கு அறிவிக்கவேண்டுமென்று எண்ணி, இருள் நீங்கி எங்கும் வெளிச்சம் பரவி ஸூர்யன் உதிக்கும் ஸமயம் ஆகிவிட்டதென்பதற்கு அறிகுறியாக செங்கழுநீர் மலர்வதையும், ஆம்பல் மூடிக்கொள்வதையும் தாங்கள் அப்பொழுதே கண்டபடியால் எடுத்துக் கூறினர். அப்போது அவளை எழுப்புவதற்காகத் தாங்கள் பட்ட க்லேசத்தையும் அவள் அறியட்டுமென்று கருதி முன் பக்கத்தால் வீட்டுக்குள் வரமுடியாமல் புழக்கடைப்பக்கமாகவந்ததை ஸூசனையாகக்காட்டி உங்கள்புழக்கடைத்தோட்டத்துவாபியிலுள்ள புஷ்பங்கள் இப்படியாயின' என்று கூறினர்.

அந்த ஸமயத்தில் வீதியில் **'हरे नारायण, हरे नारायण'** என்ற உரத்த சப்தம் எழுந்தது. அது என்ன வென்று பெண்கள் பார்த்தார்கள். இப்படி பகவந்நாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு ஸங்யாஸிகள் பலர் வீதியில் போய்க்கொண்டிருந்தனர். அங்கங்கே கோயில் கொண்டு எழுந்தருளியிருந்த எம்பெருமான்களுக்குக் காலை முதல் ராத்ரிவரையில் நடக்கவேண்டிய கைங்கர்யங்களில் ஒன்றிலும் கொஞ்சமும் பழுது வராமல் நிர்வஹிப்பதற்காகக் குடும்ப சிந்தையில்லாத ஸங்யாஸிகளே கோயில் கார்யங்களின் பொறுப்பை ஏற்பது வழக்கம். அவர்கள் உடுக்கும் உடை காஷாயம். செங்கல் பொடிபோல் சிவந்த வர்ணமுள்ளது. 'அவர்கள் மனத்தில் இருந்த ரஜோகுணமெல்லாம் வெளியே வந்துவிட்டது. ஸத்வகுணமொன்றே உள்ளுக்குள்ளே தலையெடுத்திருக்கின்றது' என்பதை இவ்வுடை காட்டுமென்பர். சரீரத்தில் ப்ராணன் தரிப்பதற்காக எவ்வளவு ஆஹாரம் அவச்யமோ அதை மாத்திரம் உட்கொள்வதன்றி வேறொன்றும் புசிப்பதில்லை. வெற்றிலைக்கும்பாக்குக்கும் ப்ரஸக்தியே யில்லை. ஆகையால் அவர்களுடைய பற்கள் சுத்தி செய்தபடி வெளுப்பாகவே இருக்கும். வேறு நிறம் உண்டாகாது. இவ்வித நியமங்களுடன் காயக்லேசமாகிற தபஸ்

ஸையும் மனோவாக் காயங்களால் எம்பெருமானுடைய கைங்கர்யமாகிற தபஸ்ஸையும் செய்கின்றவர்களாகையால் அவர்கள் தபஸ்விகளாகின்றனர். இவ்வித ஸந்யாஸிகள் அஹிம்ஸா தர்மத்தில் தீவ்ர நிஷ்டை உள்ளவர்கள். தாம் செய்யும் பகவதாராதனத்திற்குவேண்டிய துளஸியையும் தாமே பறிக்காமல் பிறர் பறித்துக்கொடுத்ததையே உபயோகிப்பர். தந்த சுத்திக்காக மா இலை வேண்டியபோது மரத்திலிருந்து தாம் அதைப்பறிக்கமாட்டார்கள். கீழே சுத்தமான விடத்தில் தானாக விழுந்து கிடக்கும் பழுப்புஇலையையே எடுத்துக்கொள்வார்கள். இப்படி அஹிம்ஸாதர்மத்தைக்கடைப்பிடித்து ஒழுகும் யதிவரர்கள், 'இருட்டில் ஸஞ்சரித்தால் கால் அடியின் கீழ் அகப்பட்டு எறும்பு முதலிய சிறு ஜந்துக்கள் மரித்துப் போய்விடுமே' என்று பயந்து தரையில் ஊர்கின்ற எறும்பும் கண்ணுக்குப்புலனும்படி அவ்வளவு வெளிச்சம் உண்டான பிறகே ஆச்ரமத்தை விட்டு வெளியே ஸஞ்சாரம் செய்ய ஆரம்பிப்பர். ஆகவே இவர்களுடைய ஸஞ்சாரமும் நன்றாக விடிந்ததற்கு ஓர் அடையாளம். ஆகையால் இதையும் அப்போது அப் பெண்கள் அங்கே எடுத்துச் சொன்னார்கள். 'ஸந்யாஸிகளும் சங்கிடுவதற்காக, அதாவது சங்கும் மற்ற வாத்யங்களும் முழங்க, தம் தம் கோயில் எம்பெருமானுடைய ப்ராதக்கால திருவாராதனத்தை விதிப்படி நடத்துவதற்காகப் போய் விட்டார்கள்' என்றனர். இதனால் 'எவ்வளவு நாழியாயிற்று என்பதை நீயே அறிந்து கொள்' என்று குறிப்பாக அறிவித்தார்கள். அப்படியும் அவள் எழுந்துவாராமையால் 'இனி ஸ்நேஹபாவத்தில் வைதும் ஏளனம் செய்தும்தான் இவளை எழுப்பவேண்டும்' எனத் தீர்மானித்தார்கள். 'நீ முன்னம் எழுந்திருந்து வந்து எங்களை எழுப்புவதாகத் தயங்காமல் சொன்னாயே அது என்னவாயிற்று? வாயிருக்கிறதென்று பேசிவிட்டால் போதுமா? சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவதன்றோ மான முள்ளவர்களுக்கு அழகு. அடி பெண்ணே, நீ ஏற்றுக்கொண்டபடி எங்களை வந்து எழுப்பவில்லை. நாங்கள் வந்து உன்னை எழுப்புகின்றோமே, இப்போதாவது நீ உடனே எழுந்து வரவேண்டாமா? வெட்கமில்லையா உனக்கு? நேற்றிரவு நாமெல்லோரும் கூடிப் பேசியபொழுது 'எல்லோரையும் நான் வந்து எழுப்புகிறேன். அது என் பொறுப்பு' என்று வெகு தாராளமாகவும், கம்பீரமாகவும் சொல்லி, 'இப்போது இப்படிச் சட்டமாய்ப் பேசுகின்றாய். விடியற்காலை தெரியும் நீ என்ன செய்கிறாய் என்று. உன்னையே பிறர் எழுப்பவேண்டிவரும்' என்று ஒருத்தி சொன்னதற்குக்கோபித்துக்கொண்டு 'அப்படியானால் அப்பொழுதன்றோ நீ என்னைச் சொல்லவேண்டும். இப்பொழுது ஏதற்காக இப்படிப் பேசுகின்றாய்?' என்று என்னென்னவோ பேசினாயே. நாக்கு நீளமேயன்றி செய்கையில் ஒன்றுமில்லையே. இவ்வளவு வெட்கம்கெட்ட ஒரு பெண்ணை நாங்கள் பார்த்ததேயில்லை. வாடி எழுந்து' என்றிவ்வாறு 'விடு விடு' என்று பேசிச் சொல்மாரி பொழிந்தார்கள்.

பரிஹாஸத்திற்காக, வேணுமென்றே எழாமல், வந்த பெண்களைக் கொஞ்சம் ச்ரமப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் அவர்கள் சொன்னதற்கெல்லாம் ஒரு உத்தரமும் கொடாது பேசாமலிருந்த நிச்சலா முன் ராத்திரி தான் பேசினதையும், கோபித்ததையும் அவர்கள் சுட்டுக்காட்டின உடனே உண்மையிலேயே வெட்கப்பட்டாள். தான் செய்தது பெருந்தவறு என்பதை உணர்ந்தாள். 'நான் வாக்குக் கொடுத்தபடி செய்யாதிருந்ததோடு அவர்கள் வந்து என்னை யெழுப்பிய போதும் அவர்களுக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுத்தேனே' என்று வருந்தினாள். அந்த க்ஷணமே சரேலென்று எழுந்து வந்து, தாள் நீக்கிக் கதவைத் திறந்து 'நான் உங்களிடத்தில் பட்ட அபசாரத்தை நீங்கள் தயவுடன் பொறுத்துக் கொள்ளவேண்டும்' என்ற ரீதியில் அவர்களைப் பார்த்து 'ஏதோ படுத்துக் கொண்டிருந்து விட்டேன். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்' என்று கேட்டாள். அப்போது அவளுடைய நிலையை உள்ளபடி அறிந்த நாயகப் பெண் 'நீ ஒன்றும் செய்யவேண்டாம். எங்களுடன் கூடஇருந்து சங்கையும் சக்கரத்தையும் ஏந்திக்கொண்டிருக்கின்ற மஹாபுஜங்களை உடையவனாய் புண்டரீகாக்ஷனை எம்பெருமானைப் பாடு' என்றாள். அவளும் அப்படியே செய்ய எல்லாப் பெண்களும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

சங்கு சக்கரங்களும் புண்டரீகாக்ஷத்வமும் 'இவன் ஸர்வேச்வரன், தேவாதிதேவன்' என்பதைக் காட்டும் அடையாளங்கள். ஸ்ரீராகவன் பரமபுருஷனே என்று கூறுமிடத்தில்

(தொடரும்)

ஸ்ரீ:

நற்போது போக்கு

கும்பகன்னனும் கன்னனும்

நன்றிமறவேல்' என்பது நம் தமிழ் மூதாட்டியாராகிய ஔவையார் 'ஆத்திசூடி' என்னும் தம் நீதி நூலின்கண் பொறித்தபொன் மொழி. 'பிறர் செய்த உதவியை நீ என்றும் மறவாதே' என்பது இதன் பொருள். நன்றி மறவாமையை 'க்ருதஜ்ஞதா' என்றும், நன்றிமறத்தல் என்னும் குணத்தை 'க்ருதக்னதா' என்றும் வடமொழியாளர் வழங்குவர். நன்றி மறத்தல் என்னும் தீய குணம் ஒருவனிடம் இருக்குமேல், அவனிட முள்ள மற்றைப் பெருமைகளெல்லாம் வெயிலின் முன் விளக்கேபோல் பொலிவுறாதழியும். ஒருவன் எத்துணைக்குறைக்கேடனாக இருப்பினும், அவனிடம் நன்றி மறவாமை யென்னும் உயர் குணம் மட்டும் அமையப்பெறுமேல், அவன் பெருமை குன்றின் மேலிட்ட விளக்கேபோல் உலகில் எஞ்ஞான்றும் சிறந்து விளங்கும். ஆன்றோர்கள் நன்றி மறத்தலை ஒரு ஸாதாரணத் தீய செயலாகக் கொள்ளாமல், பெரும் பாதகங்களுள் ஒன்றாகிய கொடுங் கொலைத் தொழிலைப் போலவே கருதியுள்ளார்கள். தவிர; இதனைச் சிசுஹத்தி கோஹத்தி யென்னும் கொடுமையினும் கொடுமையதாக அன்னோர் மதித்தன ரென்றால் வேறு என் சொல்வது? மேலும் இந்த நன்றி மறத்த லென்னும் கொடுந்தொழிலுக்கு வேறு தீர் வினையும் (பிராயச்சித்தம்) இல்லையாமெனில், இஃது எத்துணைக் கொடிய செயலாகும்? இதனை மனத்திற் கொண்டே திருவள்ளுவனாரும்,

'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.'

என்று சொல்லிப் போந்தார். முன்னர் நமக்கு ஒரு நன்றி செய்த ஒருவன், பின் நம் உயிருக்கே கேடு சூழ்வானெனினும், அவனால் முன் செய்யப்பட்ட அந்நன்றியை நினைக்குங்கால், அவன் மன்னித்தற்கே உரியவனாவனென்பது நம் ஆன்றோர் கருத்து. நமக்கு ஓர் இடுக்கண் நிகழ்ந்த விடத்து, முன் நம்மால் ஒரு பயனையுமடையாதிருந்தும் தானே வலிய வந்து உதவிய நண்பனை நாம் நம் உயிருள்ளளவும் மறவாதிருக்கவேண்டும். இத்தகைய நன்றி மறவாமையென்னும் உயர் குணத்தினால் மேன்மையுற்றோர் உலகிற் பலருள்ளா ரெனினும். அவர்களுள் சிறந்த இருவர்களைப்பற்றிச் சிறிது இங்குக் கூறுவோம்.

கும்பகன்னன்

இலங்கைக்கு இறைவனும், அரக்கர் குலத் தலைவனுமான இராவணன், ஆற்றல் மிகுந்த தன் தம்பி கும்பகருணனை அவனது நெடுந் துயிலினின்றும் எழுப்பி, இராம லக்ஷ்மணர்களோடு போர் புரியுமாறு அனுப்பினான். அவனும் போர்க்கோலம் பூண்டு, தனது வலிய அரக்கர் படைகளுடன் பொருகளம்குறுகினான். அவனது வருகையை யறிந்த அறம் வளர்க்க வந்த அண்ணல் தாசரதியும் வீடணனை நோக்கி 'நண்ப! இவன் கும்பகன்ன னென்பதை நின்னால் அறிந்தேன். இவன் நமக்கொரு கேடும் இழைத்தவனல்லன். இவனைக் கொல்வதில் என் மனம் நாடவில்லை. இவன் நம்மைச் சரணாக அடைவானேல், நாம் இவனை நமது நண்பனாக ஏற்றுக்கொள்ளச் சிறிதும் தடையில்லை' என்று அருளிச் செய்தார்.

அச்சொற் கேட்ட வீடணன், 'ஸ்வாமி! இக்கும்பகருணனது உள்ளம் இராவணனுக்காகப் பரிந்து போர் செய்யும் நிலைமைத் தாதலால், அத்தகைய தீய தன்மை குலையும்படி புத்தி கூறி, முடியுமானால் அக்கும்பகருணனை நுமது சந்நிதியிற்கொண்டுசேர்ப்பேன்' என்று கூறி ஸ்ரீராமனிடம் விடைபெற்று வானர சேனையைக்கடந்து அரக்கர் சேனையிற் சேர்ந்து கும்பகருணனைக் கிட்டி, அவனது அடியிணை தனது முடியுற வணங்கி நின்றான். கும்பகருணனோ இந்நிகழ்ச்சியை எதிர்பாராதவனாதலின், துள்ளித் துணுக்குற்றவனாய்த் தம்பியை இருகரங்களால் தழுவி யெடுத்து, 'அப்பனே! நற்றாமரைக் கயத்தை நல்லன்னம்

சேர்ந்தாற்போல் நீ அயோத்தி மன்னரிடம் சேர்ந்து அவனை அடைக்கலமடைந்தாய். அவரோ, தம் ஆருயிர் துறப்பரேனும் அடைக்கலமடைந்தோரை ஒரு போதும் துறப்பவரல்லர். அங்ஙனமாக: நீ என்ன கெடுமதி கொண்டு இங்கு மீண்டும் வந்தனை? கொடிய குலத்திற் பிறந்து, இத்துணை நன்மையைப் பெறுவது தேவர்க்கும் பெரும்பேறாயிற்றே! பிறர் மனைவியைச் சிறை வைத்ததனாலேற்பட்ட குலக்கேட்டை இராமபிரானைச் சார்ந்த உன்னைக்கொண்டே போக்கலாமென்று நான் மனமகிழ்ந்திருந்தேன். இப்போது நீ மீளவந்ததுகுறித்து என் நெஞ்சம் உளைகின்றது; வாயும் புலர்கின்றது. அறப் பெருந் துணைவராதலால் நீ புகலாக அடைந்த ஸ்ரீராமர், தம் உயிர் போவதாயினும், உன்னைக் கைவிடார். இந் நில வுலகிலுள்ளார்க்கு நேரும் இறப்பு என்பது, பிரமதேவன் வரத்தால் உனக்கு முன்னமே நீங்கிற்று. இவ்வாறு எல்லா நன்மைகளும் கைகூடப் பெற்ற நீ எம்மைச் சேருமாறு வருவது என்ன பயனைக் கருதி? பிரமன் அருளால் நல்லறிவையும் அற வழிகளையும் அடைந்த நீ, பிறந்த சாதியினிழிவை மட்டும் இன்னும் நீக்கினையில்லை போலும்; நீயாவது மீளஎம்மைச்சேராமல் இராமனுடனேயே இருந்தால் இறந்த எங்கட்குப் பிதுர் கடன் தரலாமே! இப்போது நீ இங்கு வருதல் தக்கதன்று; எப்போது வரவேண்டுமெனின்; இராமன் இராவண சங்காரம் செய்து இந்த ஊரிற் புகும் போது, எப்போதும் அழியாத இலங்கை யரசச் செல்வத்தை உன்னுடைய தாய்க் கைக்கொள்ளுமாறு அவனுடனேயே புக வேண்டும்; இப்போது இங்கு நிற்றலும் பிழை; போ' என்று சொல்லி முடித்தான்.

அது கேட்ட வீடணன், 'அண்ணா! ஒன்று கேள். அஞ்ஞானியான என்னிடத்தும் ஸ்ரீ ராமன் இன்னருள் சுரந்தான். அத்தகைய அறமூர்த்தி, நீயே சென்று கிட்டினால் உன் திறத்திலும் அவன் கருணை புரிந்து அபயமும் தருவான். அன்றியும், பிறவி நோய்க்கு மருந்தாகி, நிலைத்திராமல் சகடக்கால் போல் மாறி மாறி வரும் தன்மையதான இந்த ப்ரபஞ்ச வாழ்க்கையை யொழித்து மோக்ஷத்தையும் தருவான். தவிர: இவ்விலங்கையைப் பெற்று அதனை ஆளும் உரிமையையும் யான் தர நீ பெற்றுக் கொள்ளலாம்; இதனால் புலஸ்திய வமிசமும் விளக்கமுறும். 'இராவணனை விட்டு இராமனைச் சேர்ந்தால், அண்ணனைக்கை விட்டுச் சென்றானென்ற பழி வந்து சேருமே' என்றோ ஐயம் உனக்கு உண்டாகலாம். தருமத்தை முக்கியமாகப் பார்ப்பவர், அந்தத் தருமத்துக்கு மாறாக நடப்பவர் எவராயிருப்பினும் அவரைக் கை விடலாமென்பது நூற்றுணிபு. ஒருவன் பாதகச் செயலைச் செய்தால் அவனைக்கை விடுதல் நலமா? அன்றி அப் பாதகம் செய்தானுக்கு உதவி செய்து அதன் மூலமாகத் தன் உயிரையும் விட்டிடுதல் நலமா? நீயே ஆராய்ந்து சொல். தீவினை செய்த காரணத்தல், பெருந்தவசியாகிய பரசுராமன் தன் தாயையே துறந்து விடுதலோடு நில்லாமல், கொல்லவும் கொன்றானன்றோ? ஆதலின், அதருமமே உருக் கொண்ட நும் அண்ணனை நீத்து, இராமனைச் சேர்ந்து ஈடேறுதலே நுமக்குப் பொருந்திய செயலாகும். அருட்கடலாகிய இராமபிரான் நுமது மனத்தூய்மையை நன்கு அறிந்துள்ளார். நும்மைக் காத்து அருள் புரியவும் விரும்புகின்றார்' என்று கண்ணீர் பொழியப் பலவாறு கரைந்து கூறினான்.

அது கேட்ட கும்பகருணன், 'அப்பனே! நீ கூறியவை யாவும் உண்மையே. நான் சொல்வதற்குச் சிறிது செவி கொடு. நான் தூக்கத்தினின்று எழுந்திருக்கும் போதெல்லாம் எனக்கு வேண்டிய மது மாமிசாதிகளை மிகுதியாகச் சேர்த்து வைத்துக் கொடுத்து என்னை இது காறும் அன்புடன் வளர்த்து வந்தவன் இராவணன். 'நான் போர் புரிவேன்' என்ற நம்பிக்கையோடு அவன் இருக்கின்ற இந் நிலையில், அவனைக் கை விட்டு இராமனைச் சேர்தல், நம்பிக்கைத் துரோகமென்னும் பெருங் குற்றத்துக்கு இடனாகுமன்றோ? ஆதலின் நான் அவ்வாறு செய்யேன். உன் ஒருவனைக் கொண்டாவது அரக்கர் குலம் ஈடேறு மென்று நான் எண்ணிக் கொண்டிருத்தலால், என் எண்ணம் பழுதுபடாதபடி நீ இராமபிரானிடம் சேர். அப்போதுதான்

என் மனம் கவலையற்றிருக்கும். இது வரையில் தீய வழியிலேயே நடந்து வந்த எனக்கு, உன்னைப்போல் சிரஞ்சீவிப்பட்டம் இல்லாமையால், சாவு என்றைக்கேனும் ஒரு நாள் நேர்வது திண்ணம். ஆதலால் இந்நிலையில் தமையனை விட்டு மாற்றானை பகைஞனைச் சேர்தலில் விசேஷமான இலாபம் எனக்கு ஒன்றுமில்லை. அப்படி மாற்றானைச் சேர்ந்தால், 'இவன் உயிருக்கஞ்சி மாற்றானைச் சரண் புகுந்தான்' என்ற பழிச்சொல் வருமேயன்றிப் புகழ்ச்சொல் வாராது. ஆகையால் புகழுண்டாகும்படி என் உயிரை மாய்க்குமாறு நான் போர் செய்தலே எனக்குத் தகுதி. உனக்கு அப்படியல்ல. நீயோ எப்போதும் நல்லொழுக்க முடையவன்; சிரஞ்ஜீவி. நீ மாற்றானைச் சார்ந்தாயே யானாலும், உயிருக்கஞ்சி எதிராளியையடைந்தாய் என்ற பழிக்கு இடமில்லை. புகழே உண்டு. தலைவன் தீச்செயலை புரிவானாயின், அவனைத் திருத்துதல் நலமுடைத்தே. ஆனால் அவன் திருந்தவில்லையென்ற காரணத்தை யேறிட்டு, மாற்றான் பக்கம் சேர்ந்து பொருளைப் பெறுவது சரியன்று. மற்றும் ஒருவன் அன்னத்தை உண்டபின்பு அவருக்காகப் போரில் இறத்தலே உண்டவர்க்குத் தகுதியாகும். மற்றொன்று கூறுவேன். மூவுலகங்களையும் அடக்கியாண்டவனான இராவணன், இராமசரத்தினால் மாளநேரும் பொழுது, தம்பியர் கைவிட்டுச் செல்லத் தனியனாய்ச் செத்துக் கிடக்கிறானென்ற பழிப்புச் சொல்லைப் பெறாமல், சேனைசள் கிளைகள் இவர்களோடு தம்பியும் உடனமடிய இறத்தலே இராவணனுக்குத் தக்கது. ஆதலால் யான் அவனை விட்டு வரேன்' என்று சொல்லி முடித்தான். கும்பகருணனது மனவுறுதியை அறிந்த விடணன், இவன் கொள்கையினின்றும் இவனைத் திருப்பமுடியாதென்றறிந்து இராமபிரானைச் சென்றடைந்தான்.

கடைசியாக: கும்பகருணன் நன்றி மறவாமை யென்ற குணத்தையே கடைபிடித்துத் தசமுகனுக்கு உதவியாகப் போர்புரிந்து, தன் உயிரையும் அவன் பொருட்டு உதவினான்.

* * * * * * * * * *

கன்னன் வரலாறு.

தந்தை யரண்மனையில் தந்தையின் கட்டளைப்படி துருவாசமுனிவர்க்குக் குந்தி ஓராண்டு பணிவிடைகள்புரிய, அம்முனிவர் மனமுவந்து ஒரு மந்திரத்தைக் குந்திக்கு உபதேசிக்க, இளமை காரணமாகக் குந்தி அம்மந்திரத்தின் பயனைச் சோதிக்கக் கருதி, அம்மந்திரத்தைக் கொண்டு ஸூர்யனை நினைக்க, அத்தேவனருளால் பிறந்தவன் கன்னன். அப்போது குந்தி பழிக்கு அஞ்சி, அக்குழவியைப் பெட்டியில் வைத்து யாற்றுப் பெருக்கிலிட்டனள். அக்குழந்தையை அதிரதன் என்ற பாகர் தலைவன் கண்டெடுத்து வளர்த்து வந்தான். அக்கன்னன் துரியோதனனுக்கு ஆருயிர் நண்பனாய் அங்கநாட்டரசையேற்று, அவனுடனே சரிசமானமாய் வளர்ந்து வரலானான். ஸ்ரீ கண்ணபிரான் பாண்டவ தூதராகச் சுயோதனன் பாற் சென்ற காலை, அவர் அவ்வரக்கொடியோன் நண்பனும் போரிற் சிறந்த வீரனுமான கன்னனைத் தனியே ஒரு புறமழைத்து, அவன் குந்திதேவியின் மூத்த மைந்தனென்றும், பாண்டவர் ஐவரும் அவனது உடன் பிறப்பினரென்றும், அது வரையில் அவன் அறியாத ரஹஸ்யத்தை எடுத்துக்கூறி, அவனைப் போரிற் பாண்டவர் பக்கம் சேருமாறு தூண்டினர். அஃதன்றி, குந்தியைத் தன் உண்மைத் தாயென்று அறியும் பொருட்டுக் கன்னனிடம் அனுப்பினர். இன்னார் பெற்ற பிள்ளை என்று ஏற்படாத கன்னன் மிகுந்த உதார குணமுடையவனாயிருந்ததனால், உலகத்திலே பணப் பித்துக்கொண்ட பல மகளிர் இவனிடம் வந்து தாம்தாம் தாயென்று கூறிச் செல்வம் பறிக்க முயல, அதனை நோக்கிக் கன்னன் தேவர்களை வேண்டவே, அவர்கள் தெய்வத் தன்மை யுள்ள ஓராடையை அவனிடம் தந்து, 'உண்மையான தாயொருத்தி யொழிய வேறு எவரேனும் தாயென்று வருபவர் இதனை உடுத்தால் இறந்து படுவர்' என்று சொல்லிப் போக, அங்ஙனம் அவனால் பரீக்ஷிக்கப்பட்டுப் பல தாய்மார் அச்சேலையால் உடலெரிபட்டு ஒழிந்தனர். பொய்யாகத் தாயென்று அடாவடியடித்த பலர் இறந்தொழிந்தன ரென்று கன்னன் கூறியதை கேட்டு, குந்தி, தான்

சொல்வது உண்மை யென்ற எண்ணம் உறுதியாக இருத்தலால், அத்தேவி மனத்தடுமாற்றமில்லாமல் 'அவ்வாடையைக் கொடு' என்று வாங்கிப் பிரித்து உடுத்தி, தான் கன்னனுக்கு மெய்யான தாய் என்று யாவரும் தெரியும்படி நின்றாள். அப்போது குந்தி அன்பு தோன்றக் கன்னனை நோக்கி, 'மதலாய்! நீயே அரசுக்குரிய மூத்த குமாரன்; ஆதலால் இவ்விஷயம் தெரிந்த பின்பு என்னோடு வந்து உன் தம்பியராகிய பாண்டவர் ஐவருமுனக்குக் குற்றேவல் செய்ய, அவர்களிடம் அன்பு கொண்டு பகையின்றி, மற்றையரசரெல்லாம் உன்பாதங்களில் வணங்கக் குருகுலத்துச் சக்ரவர்த்தியாய் வீரம் செல்வம் இவற்றோடு வாழவேண்டும். இதுவே முறையான செயல்' என்றாள். அதற்குக் கன்னன், 'அம்மா! நீர் இப்போது பெற்றதாயென வந்தீரே தவிர, பெற்றவுடனே என்னை அன்பில்லாதவர் போல் நாணத்தால் விட்டிட்டீர். தேர்ப்பாகன் வளர்த்ததனால் சிறுமைப்பட்ட என்னைச் சிறு பிராயம் முதல் இன்றளவும் துரியோதனன் உயிர்த் துணைவனாகக் கொண்டு அங்கதேசத்துக்கு அரசனாக்கி, உடன் வைத்து உண்டு, அரசர்களும் வணங்கும்படி ஒரு மதிப்பும் பெருமையும் தந்தான். அம்மா! ஒன்று கேள். ஒரு நாள் நான் துரியோதனன் மனைவி பானுமதியோடு தனிமையான இடத்தில் சூதாட்டமாடிக் கொண்டிருந்தேன். அப்போது துரியோதனன் தூரத்தில் வருதலைக் கண்டு பானுமதி எழுந்து செல்ல, அவன் வருகையைப் பாராத நான் 'ஆட்டத்தின் நடுவில் எழுந்து செல்லலாகாது' என்று சொல்லி அவள் மடியைப் பற்றி இழுத்தேன். அப்பொழுது அவளுடைய மேகலை அறுந்து மணிகள் உதிர்ந்து சிதறின. அச்சமயம் நான் என் செயலுக்கு வெள்கி என் செய்வதென்று அலமருகையில், அத் துரியோதனன் நான் அஞ்சாதிருக்குமாறு 'கீழே விழுந்து கிடக்கும் இம்மணிகளை நான் எடுத்துக் கோத்துக் கொடுக்கட்டுமா? என்று கேட்டான். இப்படி நகமும் சதையும் போல் துரியோதனனோடு நட்புரிமை கொண்டு அந்தரங்கமாகப் பழகி, அவனுடைய செவ்விய சோற்றை உண்டு வளர்ந்த நான் உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினையாமல், போரில் அவனுக்கு என்னாலியன்ற உதவி புரியாவிடில் எனது கடமையும் தருமச் செயலும் என்னாகும்?' என்று சொல்லித் துரியோதனனை விட்டுப் பாண்டவரிடம் வரமாட்டேனென்று சொல்லிவிட்டான்.

கடைசியாகக் கன்னன் பாரதப்போரில் அச்சுயோதனனுக்குப் படைத் தலைமை பூண்டு, பாண்டவரிடம் எதிர்த்துக் கடும் போர்புரிந்து, அப் பொருகளத்திலேயே தன்னுயிரையும் துறந்தான். இவ்விரு வீரருடைய உதவி மறவாத உத்தம குணந்தானென்னே!

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று'

(கரு) ப்ரபோ! இவ்வுலகில், ஸம்ஸாரியான புருஷன் தன் ஸம்ஸாரபந்த க்லேசத்தை உடனே தீர்க்கக்கூடிய சக்திவாய்ந்ததாயும், உம் விஷயமான ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறதுமான, வேதாந்தம், இதிஹாஸம், பாஞ்சராத்ரம், பகவத்கீதை முதலியவைகளின் உபதேசமாகிற உயர்ந்த மருந்தைக்கண்டு அது ஹிதமென்று அறியாமல் அஞ்சுகிறான். மேலும்; மீன் தூண்டிலிலிருக்கும் பக்ஷண வஸ்துவை ஆசைப்பட்டு நாசமடைவதுபோல், கெட்டமார்க்கங்களான, பௌத்த, வைசேஷிக, வாத்ஸ்யாயநாதி ஶாஸ்திரங்களினர்த்தங்களை கொடிய விஷமென்று அறியாமல் போக்ய வஸ்துக்களாக நினைத்து அதில் பரீதியை வைத்து நாசமடைகிறான். இப்படி விடவேண்டியதை விடாமலும், ஸ்வீகரிக்க வேண்டியதை விட்டும், தான் செய்த பாபத்திற்கு அநுதாபப்பட்டு ப்ராயச்சித்தம் செய்துகொள்வதில் நோக்கில்லாமலுமிருக்கிற இந்த ஸம்ஸாரியையும், ஆச்ரித தோஷத்தைக் கிஞ்சித்தும் கணிசியாத உம்முடைய க்ருபை, யாத்ருச்சிகாதி ஸுக்ருத பரிபாகவேளையில் ஸத்வ குணத்தை வ்ருத்திசெய்து, ஸத்ஸங்க, ஸதாசார்ய ஸமாச்ரயணமூலமாக ரக்ஷிக்கிறது.

மேல் ச்லோகத்தில் பகவானுக்கு ஆச்ரிதரக்ஷணம், தன்னுடைய ரக்ஷணம் என்கிறார்.

अपार्थ इति निश्चितः प्रहरणादियोगस्तव स्वयं वहसि निर्भयस्तदपि रङ्गपृथ्वीपते ।
स्वरक्षणमिवाभवत्प्रणतरक्षणं तावकं यदात्थ परमार्थविन्नियतमन्तरात्मेति ते ॥ ११

அபார்த்த இதி நிச்சித: ப்ரஹரணாதியோகஸ்தவ
ஸ்வயம் வஹஸி நிர்பயஸ்ததபி ரங்கப்ருத்வீபதே ।
ஸ்வரக்ஷணமிவாபவத் ப்ரணதரக்ஷணம் தாவகம்
யதாத்த பரமார்த்தவிந்நியதமந்தராத்மேதி தே ॥

(ப-ரை) ஹே ரங்கப்ருத்வீபதே-ஸ்ரீரங்கநாதனே! தவ-உமக்கு, ப்ரஹரணாதியோக:-ஆயுதம், பரிஜநம் இவைகளின் சேர்க்கை, அபார்த்த:இதி-வ்யர்த்தம் என்று, நிச்சித:-ஶாஸ்திரங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. ஸ்வயம்-தான், நிர்பயோபி-பயமில்லாதவனாயிருந்தும், தத்-அந்த ஆயுதம் பரிஜநம் முதலியதை, வஹஸி-வஹிக்கிறீர். ஏனென்றால், ப்ரணதரக்ஷணம்-ஆச்ரிதர்களை ரக்ஷிப்பது, ஸ்வரக்ஷணமிவ-தன் ரக்ஷணமாகவே ஆயிற்று. யத்-எந்த காரணத்தால், தாவகம்-உம்மைச்சேர்ந்தவனைக்குறித்து, பரமார்த்தவித்-தத்வ ஜ்ஞானியான(பக்தன்)நியதம்-நிச்சயமாக, தே-உமக்கு, அந்தராத்மேதி--அந்தர்யாமீ என்று ஆத்த-சொல்லுகிறீரோ!

(கரு) ரங்கநாத! **'भीषास्माद्वातः पवते'** **'एतदभयम्'** இத்யாதி ச்ருதிகளின்படி, உலகத்தில் பயத்திற்குக் காரணமான ம்ருத்யுமுதலியவர்களுக்கும் பயத்தைக்கொடுக்கிறவராயும் தனக்கு ஒருவரிடமும் பயமில்லாதவராயுமிருக்கிறபடியால், நீர் திவ்யாயுதங்களையும் திவ்யபரிஜநங்களையும் வைத்துக்கொள்ளவேண்டிய அவச்யமில்லை. ஆயினும், நீர் அவைகளை தரித்துக் கொண்டிருப்பது தற்காப்புக்காக அல்ல. உம் பக்தர்களைப் பாதுகாப்பதற்காகவேதான். ஜீவ பரமாத்மாக்களுடைய ஶேஷ ஶேஷிபாவாதி ஸம்பந்தங்களை அறிந்து தனக்கு அநுரூபமான உபாயத்தில் ப்ரவர்த்தித்த பக்தனை, **'ज्ञानीत्वात्मैव मे मतम्'** என்று உமக்கு ஆத்

மாவாக நீர் அருளிச்செய்திருப்பதால் அவர்களை ரக்ஷிப்பது உம்முடைய ரக்ஷணமாகவே ஆகிறது.

அடுத்த ச்லோகத்தில் பகவானுடைய நிரதிசய போக்யதையை அருளிச் செய்கிறார்.

लघिष्ठ सुखसङ्गदैः स्वकृतकर्मनिर्वर्तितैः कलत्रसुतसोदरानुचरबन्धुसंबन्धिभिः ।
धनप्रभृतिकैरपि प्रचुरभीतिभेदोत्तरैर्नबिभ्रति धृतिं प्रभो त्वदनुभूति भोगार्थिनः ॥

லகிஷ்ட ஸுகஸங்கதை: ஸ்வக்ருதகர்ம நிர்வர்த்திதை:
களத்ரஸுதஸோதரா நுசரபந்து ஸம்பந்திபி: ।
தநப்ரப்ருதிகைரபி ப்ரசுரபீதிபேதோத்ரை:
ந பிப்ரதி த்ருதிம் ப்ரபோ த்வதநுபூதிபோகார்த்திந: ॥

(பதவுரை) ப்ரபோ! ஸ்வக்ருத-தன்னால்செய்யப்பட்ட, கர்ம—புண்யபாபரூபமானகர்மாக்களால், நிர்வர்த்திதை:-உண்டுபண்ணப்பட்டவைகளாயும், லகிஷ்ட—மிகவும் அல்பமான, ஸுக-ஸுகத்தின், ஸங்கதை:—ஸம்பந்தத்தைக் கொடுக்கிறவைகளாயும், ப்ரசுரபீதிபேத—அதிக பயத்தைக் கொடுப்பவைகளுக்குள், உத்தரை:-உயர்ந்தவைகளாயுமிருக்கிற, களத்ரஸுதஸோதராநுசரபந்துஸம்பந்திபி:—பத்நி, புத்திரன், ஸஹோதரன், வேலைக்காரன், பந்துக்கள், தன்னைச் சேர்ந்த பசு முதலிய பிராணிகள் இவைகளாலும், தநப்ரப்ருதிகைரபி—தனம் முதலியவைகளாலும், த்வதநுபூதி-உம்முடைய அநுபவமாகிற, போக—போகத்தை, அர்த்திந:-விரும்புகிறவர்கள், த்ருதிம்—ஸந்தோஷத்தை, ந பிப்ரதி—தரிக்கிறதில்லை.

(கருத்து) ப்ரபோ! உம்முடைய அநுபவமாகிற எல்லையற்ற ஆநந்தத்தையநுபவிக்கவிரும்புகிற முமுக்ஷுக்கள், தான்செய்தபூர்வகர்மங்களின்பலன்களான, பத்நி, புத்திரன், ஸஹோதரன், பந்துக்கள், தனம், க்ருஹம், நிலம், தோட்டம் முதலிய வஸ்துக்கள் அல்பமான ஸுகத்தையேகொடுப்பதாலும், பயத்தைக்கொடுக்கும் ஸர்ப்பம், புலி, காடி முதலியகொடிய ஜந்துக்களைக்காட்டிலும் அதிக பயத்தைக் கொடுப்பதாயிருப்பதாலும் அவைகளால் ஸந்தோஷத்தை அடைவதில்லை.

மேல் ச்லோகத்தில் போகோபகரண போகஸ்தானங்களின் ஹேயத்வத்தை அருளிச் செய்கிறார்.

नवक्तुमपि शक्यते नरकगर्भवासादिकं वपुश्च बहुधातुकं निपुणचिन्तने तादृशम् ।
त्रिविष्टप सुखं तथा तव पदस्य देदीपतः किमत्र न भयास्पदं भवति रङ्गपृथ्वीपते ॥ १३

நவக்துமபி சக்யதே நரககர்ப்பவாஸாதிகம்
வபுச்ச பஹுதாதுகம் நிபுணசிந்தநே தாத்ருசம் ।
த்ரிவிஷ்டபஸுகம் ததா தவ பதஸ்ய தேதீபத:
கிமத்ர ந பயாஸ்பதம் பவதி ரங்கப்ருத்வீபதே ॥

(ப—ரை) ஹே ரங்கப்ருத்வீபதே—ஸ்ரீரங்கநாதனே! நரககர்ப்பவாஸாதிகம்—நரகவாஸம், கர்ப்பவாஸம், பால்யம், யௌவநம், வார்த்தகம், மரணம் இவைகள், வக்துமபி—சொல்வதற்கும், ந ஶக்யதே—முடியாது. பகுதாதுகம்—மாம்ஸம், ரக்தம், சீ முதலிய தாதுக்களை உடையதான, வபுச்ச—ஶரீரமும், நிபுணசிந்தனே—நன்ருக ஆலோசித்துப்பார்க்கும்போது தாத்ருசம்—நரகவாஸம் போல் சொல்லமுடியாதது. த்ரிவிஷ்டபமுகம்—ஸ்வர்க்க லோகம் முதலியதும், ததா—அப்படியேதான். தவ—உம்முடைய, பதஸ்ய—ஸ்தானமான பரமபதம், தேதீபதஸ்ஸத:—அதிகமாய் ப்ரகாசிக்கும்போது, அத்ர—இவைகளுக்குள், கிம்—எதுதான் பயாஸ்பதம் ந—பயத்திற்கு இருப்பிடமாக இல்லை.

(கரு) ஸ்ரீரங்கபூமிக்கு ஈச்வரனே! மனிதர்கள் செய்யும் பாபபலனைய்வரக்கூடிய ரௌரவாதி நரகவாஸமும், பிறவியில் ஏற்படும் கர்ப்பவாஸமும், பால்யம் யௌவனம் கிழத்தனம், மரணம் இந்த அவஸ்தைகளும் மிகவும் அறுவறுப்பைக் கொடுக்கக்கூடியதாயிருப்பதால் சொல்வதற்குக்கூட இயலாததாயிருக்கிறது. அப்படியிருக்கும்போது அநுபவிப்பதைப் பற்றிக் கேழ்க்கவேணுமோ? போகத்திற்கு ஸாதனமான சரீரமும் மாம்ஸம் ரக்தம், சீ முதலியவைகள் நிறைந்திருக்கிறபடியால் நன்ருக பராமர்சித்துப் பார்க்கில் மிகவும் அறுவறுக்கத் தக்கதே. புண்யவசத்தால் ஸம்பாதிக்கப்பட்ட ஸ்வர்காதி லோகங்களும் அஸ்திரமாயும் துக்கம் கலந்ததாயுமிருக்கிறபடியால் மிகவும் அறுவறுக்கத்தக்கவைகளே. எப்போதும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கும் உம்முடைய ஸ்தானமான பரமபதம் தவிர மற்றெல்லாம் பயத்திற்கு இருப்பிடமாகவே இருக்கின்றன.

முன் ச்லோகத்தினர்த்தத்தை அநுவதித்துக்கொண்டு தன்னிடம் பகவானை க்ருபை செய்யும்படி ப்ரார்த்திக்கிருர்.

भवन्ति मुखभेदतो भयनिदानमेव प्रभो शुभाशुभविकल्पिता जगति देशकालादयः ।
इति प्रथित साध्वसे मयि दयिष्यसे त्वं न चेत्कइत्थमनुकम्पिता त्वदनुकम्पनीयश्च कः ॥ १४

பவந்தி முகபேததோ பயநிதாநமேவ ப்ரபோ
சுபாசுபவிகல்பிதா ஜகதி தேசகாலாதய:।
இதி ப்ரதித ஸாத்வஸே மயி தயிஷ்யஸே த்வம் நசேத்
க இத்தமநுகம்பிதா த்வதநுகம்பநீயச்ச க: ॥

(ப—ரை) ஹே ப்ரபோ! ஜகதி—உலகத்தில், சுபாசுபவிகல்பிதா:—நல்லது என்றும் கெட்டது என்றும் பிரித்துச் சொல்லப்பட்ட, தேசகாலாதய:—தேசம் காலம் முதலியவைகளும், முகபேதத:—வேறு ப்ரகாரத்தினல், பயநிதாநமேவ—பயத்திற்கு மூலகாரணமாகவே, பவந்தி—இருக்கின்றன. இதி—என்கிறகாரணத்தினல், ப்ரதித—அதிகமான, ஸாத்வஸே—பயத்தையுடையவனுன, மயி—என்னிடத்தில், த்வம்—நீர், ந தயிஷ்யஸேசேத்—தயவுசெய்யாமலிருப்பீரேயாகில், க:—(வேறு)யார்தான், இத்தம்—இப்படி, அநுகம்பிதா—தயவுசெய்வான். த்வத்—உமக்கு, அநுகம்பநீயச்ச—தயவுசெய்யத்தகுந்தவனும், க:—யார் இருக்கிருன்.

(கரு)ப்ரபோ! இந்த ப்ரக்ருதிமண்டலத்தில், ப்ரஹ்மா இந்திரன் முதலியவர்களுடைய லோகங்களும், இளாவ்ருதம் முதலியதேசங்களும் நல்லவை என்றும், நரகலோகமும் ம்லேச்சாதிகள் வஸிக்குமிடங்களும் கெட்டதேசங்கள் என்றும், காலங்களுள் க்ருத த்ரேதா த்வாபர யுகங்களும், சுபக்ரஹங்களின் த்ருஷ்டிமுதலியவையுள்ள காலங்கள், சுபகாலங்கள் என்றும், கலியுகமும் அசுபக்ரஹங்களின் வீக்ஷணாதிகளுள்ள காலங்களும் அசுபகாலங்கள் என்றும், ஶாஸ்திரங்களில் பிரித்து சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் வேறு ப்ரகாரத்தினால் பயத்திற்கே மூலகாரணங்களாக திகழ்கின்றன என்பதை அறிந்து, அதனால் அதிகமாக இஸ்ஸம்ஸாரத்தில் பயமுற்ற என்னிடம், ஸர்வஜ்ஞனும் வாத்ஸல்யாதி குணங்களையுடையவனுமிருக்கிற தேவரீரே க்ருபை செய்யாமல் போனால், வேறு யார்தான் ஸம்ஸார பயத்தை நிவர்த்திசெய்யும்படி தயவு செய்யப்போகிறார்கள், ஒருவருமில்லை. இப்படி வேறுகதியற்ற என்னை விட்டு விட்டால் வேறு யார்தான் தேவரீருடைய தயைக்கு பாத்திரமாவார்கள். ஆகையால் அடியேனை உம்முடைய தயைக்கு பாத்திரமாகச்செய்ய வேணும்.

(அவதா) **'प्रियो हि ज्ञानिनोत्यर्थमहं स च मम प्रियः'** என்கிறபடி என்னிடம் எல்லையற்ற பக்தியை செய்த உபாஸகனல்லவோ எனக்கு ரக்ஷிக்கத்தகுந்தவன் உம்மை நான் எப்படி ரக்ஷிப்பேன் என்றால், அதற்கு அருளிச்செய்கிறார்.

सकृत्प्रपदनस्पृशामभयदाननित्यव्रती न च द्विरभिभाषसे त्वमिति विश्रुतः स्वोक्तितः ।
यथोक्तकरणंविदुस्तवतु यातुधानादयः कथं वितथमस्तु तत्कृपणसार्वभौमे मयि ॥ १५

ஸக்ருத்ப்ரபதநஸ்ப்ருசாமபயதாநநித்யவ்ரதீ
ந ச த்விரபிபாஷஸே த்வமிதி விச்ருத: ஸ்வோக்தித: ।
யதோக்தகரணம்விதுஸ்தவது யாது தா நாதய:
கதம் விதத மஸ்து தத்க்ருபணஸார்வபௌமே மயி ॥

(ப—ரை) ஸக்ருத்—ஒருதடவை, ப்ரபதநஸ்ப்ருசாம்—ப்ரபத்தியை அநுஷ்டித்தவர்களுக்கு. அபயதான—அபயத்தைக் கொடுப்பதை, நித்யவ்ரதீ—நித்யவ்ரதமாக உடையவரான, த்வம்—நீர், த்வி:—இரண்டுதடவை, நசாபிபாஷஸே—பேசுகிறதில்லை. இதி—என்று, ஸ்வோக்தித:—தன்னுடைய (உம்முடைய) வார்த்தையினால், விச்ருத:—ப்ரஸித்தியடைந்திருக்கிறீர். தவ—உம்முடைய, யதோக்தகரணம்து-சொன்னபடிசெய்வதை, யாதுதாநாதய:—விபீஷணன் முதலியவர்கள், விது:-அறிகிறார்கள். தத்-அப்படிப்பட்ட வ்ரதம், க்ருபண—அகிஞ்சநர்களுக்கு, ஸார்வபௌமே—சக்ரவர்த்தியான, (மிகவும் அகிஞ்சநனை என்றபடி) மயி—என் விஷயத்தில், கதம்—எப்படி, விததம்-வியர்த்தமாக, அஸ்து-ஆகும்.

ஸ்ரீ:

ஆதிபகவன்

முந்தை மறைநூன் முடியெனலாந் தண்குருகூர்ச்
சேந்தமிழ் வேத சிரமெனலாம் – நந்தும்
புழைக்கைக்கும் ஏயப் பொதுவர் மகளிர்க்கும்
அழைக்கைக்கு முன்செல்லடி.

— (நளவெண்பா.)

[முந்தை-ஆதியிலுண்டான; மறை—வேதத்தின்; முடி-கிரீடம்; செந்தமிழ்-செவ்வையான தமிழ் பாஷையின் வடிவமான; நந்தும்—துன்பப்பட்டுக் கொண்டிருந்த; புழைக்கை—யானை; பொதுவர்—இடையர்; மகளிர்—பெண்கள்; செல் அடி—சென்ற பாதம்.]

'ஆதிபகவன்' என்பது ஆதியாகிய பகவன் என விரியும். இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஒரு பொருளை உணர்த்துதற் பொருட்டு நடுவே ஆகிய வென்னும் பண்புருபு தொக்கு நிற்கப் பொதுப் பெயருஞ் சிறப்புப் பெயரும் தம்முட் புணர்ந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத் தொகையாம். இதில் ஆதி யென்பது சிறப்புப் பெயரும் பகவன் என்பது பொதுப் பெயருமாம். இது வடமொழிப் புணர்ச்சி யாதலால், வலி மிகவில்லை. இது தமிழ் நூன்முடிபாயின் ஆதிப்பகவன் என்று வல்லொற்று மிகும். 'பகவன்' என்பதுபகவாந் என்னும் வடமொழியின் விகாரம்.

பகவான் என்ற சப்தத்தின் பொருள் ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் விளக்கப் பெற்றுள்ளது. அது பின் வருமாறு:—

சுத்தே மஹாவிபூத்யாக்யே பரே ப்ரஹ்மணி சப்த்யதே | மைத்ரேய! பகவச் சப்தஸ் ஸர்வகாரண காரணே ||

ஸம்பர்த்தேதி ததா பர்த்தா பகாரோர்த் தத்வயாந்வித: | நேதா கமயிதா ஸ்ரஷ்டா ககாரார்த்தஸ் ததா: ஸ்ருத ||

ஐச்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய வீர்யஸ்ய யசஸ ச்ரிய: | ஜ்ஞாந வைராக்யயோச்சைவ ஷண்—ணாம் பக இதீரணா ||

வஸந்தி தத்ர பூதாநி பூதாத்மந்யகிலாத்மநி | ஸச பூதேஷ்வசேஷேஷு வகாரார்த்தஸ் ததோவ்யய: ||

ஜ்ஞாந சக்திபலைச்வர்யவீர்யதேஜாம்ஸ்ய சேஷத: | பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயைர் குணாதிபி: ||

ஏவமேஷ மஹா சப்தோ மைத்ரேய பகவாநிதி | பரமப்ரஹ்மபூதஸ்ய வாஸுதேவஸ்ய நாந்யக: ||

தத்ர பூஜ்ய பதார்த்தோக்தி பரிபாஷா—ஸமந்வித: | சப்தோயம் நோபசாரேண அந்—யத்ர ஹ்யுபசாரத: ||

[மைத்ரேயரே! சுத்தமானதும், 'மஹா விபூதி' என்னும் பெயரையுடையதும், காரண புருஷர்களுக் கெல்லாம் காரணமாயிருப்பதுமான பரப்ரஹ்மத்தினிடத்தில் பகவச் சப்தம் சொல்லப் பெறுகிறது. ('ப்ரக்ருதியை) கார்யதசை அடையச் செய்பவன்' 'ஸ்வாமி' என்னும் இரண்டு பொருள்களுடன் கூடியது பகாரம். அப்படியே ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன், ஸ்ருஷ்டிப்பவன்' என்பது 'க' என்னும் எழுத்தின் அர்த்தம் என்று சொல்லப் பெறுகிறது. ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞாநம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'பக' என்னும் பதம் வாசகமாயிருக்கிறது. பூதங்களை சரீரமாகக் கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூதங்களிலும் வஸிக்கின்றான். ஆகையால் அழிவற்றவனான பகவான் வகாரத்துக்கு அர்த்த

மாகிறுன். இழானவையான முக்குணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞானம்' சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லாகுணங்களும் 'பகவான்' என்னும் சப்தத்தினல் சொல்லப் பெறுகின்றன. மைத்ரேயரே! இம்மாதிரியாக பகவான் என்ற இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரியது. வேறொருவரையும் குறிக்காது. பூஜிக்கத்தக்க பொருளை குறிப்பதாகிய இந்த சப்தம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாக (அமுக்யமாக)ச் சொல்லப்படுவதில்லை. மற்றவர்கள் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப் பெறுகிறது.]

ஸ்ரீவிஷ்ணுபுராணம் (மதுரை ஜில்லா, திருப்புத்தூர் தாலூகா சிறுகூடற்பட்டி என்னும் செங்கெற்குடி சாமிக்குட்டிஐயர் என்று பெயர் வழங்கும் ப்ரஹ்மஸ்ரீ சே. சுப்பராய ஐயரவர்களால் தமிழில் இயற்றப் பெற்றது. 1904. குரோதி ஆண்டு ஐப்பசித் திங்கள்.) ஆறுவதம்சம். ஐந்தாவது ஆத்தியந்தகப் பிளயமும் சனனுதி துக்க நிரூபணமும் உரைத்த அத்தியாயம். இதில் உள்ள சில பாக்கள் ஈண்டு தருதும்.

அசமதி னினைக்க வேண்டு மப்பர மான்மா
ரூபம்
பகவனேன் றுரைக்கா நின்ற பதத்திற்குப்
பொருளா மந்தப் ।
பகவனு நாம மன்னேன் பற்பல குணஞ்சொ
ரூப
முகவைசால்விபவ மின்ன வுரைத்திடத்
தக்க தன்றே. (42)

இவ்வகை யுரைக்கத் தக்க வெழிலமை
யுருவம் வாய்ந்த
செவ்விய பரமான் மாவின் றத்துவந் தெரிப்ப
தான ।
வவ்வயிற் றுவாத சாக்க ரத்தினை யங் மாக்
கொண்
டொவ்விய வித்தை தானே யுயர்பர வித்தை
யாகும். (43)

மற்றுமிப் பகவ னென்னும் வாசக நாம
ரூபம்
பெற்றில னுகி யன்ன பிரமத்திற் கிணையாய்
நின்ற ।
பற்றறு முத்த னுக்கும் பகரும்பூ சையினி
மித்தாய்
நற்றவ வுபசா ரத்தா னவின்றதஃ தென்ன
வோர்தி (44)

பிரமாம் வாசு தேவற் கல்லது பிறருக் காகா
தூரவுமிச் சொல்லே மேன்மை யுறுத்துதற்
காமி டத்தில் ।
விரவுசங் கேத மாக விளப்புமக் குறிப்பி
னுனும்
பரவுமவ் வாசு தே-வன் றன்னையே யுணர்த்
தும் பண்பின். (47)

மற்றைய விடத்தோ வென்னி லுபசார
வழக்காய்ச் செல்லு
மற்றது தனக்கும் ஞான விசேடமங் கிருக்க
வேண்டு ।
முற்றவங்கவையா வென்னி லுற்பத்தி யிலயத்
தோடு
சொற்றபூ தத்தின் போக்கு வரவொடு துக
ளில் வித்தை. (48)

அவித்தையென் றிவற்றை யோர்ந்தோன்
பகவனென் றறைதல் வேண்டும்
புவித்தல மதனின் மற்றும் பூரண ஞானஞ்
சத்தி ।
கவித்திடு செல்வந் தேசு கழுமுவீ ரியமே யாதி
யிவற்றினை யுடைமை யீன குணங்களில்
லாமை யின்ன. (49)

வாக்கியப் பொருளாய் நிற்கு மாதலா
லிஃது பற்பல்
போக்கமை குணங்க ளின் றிப் புனிதமாங்
குணம்பூண் டியாவு ।
மாக்குமெம் பெருமா னுக்கே யாகின்ற
தனைத்தி னுக்கு
மீக்சொளா தார மாகி விளப்புமா தேய
மாகி. (50)

விளங்குறுமவ் விண்டுவினை வாசுதே வப்
பதந்தான் விளக்கும். (51)

எனவே, நிறைந்த மகிமை, தைரியம், கீர்த்தி, ஐச்வர்யம், ஜ்ஞானம், வைராக்யம் என்கிற ஆறு குணங்களையும் உடைய கடவுள் என்பது 'பகவன்' என்பதற்குப் பொருள் என்க.

த்யாயீத புருஷம் விஷ்ணும் நிர்குணம் பஞ்சவிம்சகம்। புரமாக்ரம்ய ஸகலம் சேதே யஸ்மாத் மஹாப்ரபு:॥ தஸ்மாத் புருஷ இத்யேவ ப்ரோச்யதே தத்வசிந்தகை:।

(ஸ்ரீவிஷ்ணுஸ்ம்ருதி)

[ஸத்வரஜஸ்தமோகுணங்கள் அற்றவனும், இருபத்தைந்தாவது தத்வமான ஆத்மாவுக்கு அந்தர்யாமியும், புருஷன் என்று சொல்லப் பெறுமவனுமான விஷ்ணுவை த்யானம் செய்யுங்கள். ஸர்வேச்வரனை இவன் எல்லாப் புரங்களையும், ஹ்ருதய குஹைகளையும் வியாபித்து சயனித்துக் கொண்டிருக்கிறுனுகை யால் தத்வம் அறிந்தவர்களால் புருஷன் எனப்படுகிறுன்.]

என்றும்;

பூஸ்ஸம்ஜ்ஞேஸ்மிந் சரீரே வை சயநாத் புருஷோ ஹரி:। ஸகாரஸ்ய ஷகாரோயம் வ்யத்யாஸேந ப்ரயுஜ்யதே॥ யதி வா பூர்வமேவாஹமிஹேதி புருஷம் விது:। யதி வா பஹு தாநாத் வை விஷ்ணு: புருஷ உச்யதே। பூர்ணத்வாத் புருஷோ விஷ்ணு: புராணத்வாச்ச சார்ங்கிண:।யத்வா புருஷசப்தோயம் ரூட்யா வக்தி ஜநார்த்தநம்.

–(பாத்ம புராணம்)

['புரம்' எனப்படும் இந்த சரீரத்தில் சயனித்துக் கொண்டிருப்பதால் ஹரி புருஷன் எனப்படுகிறுன். ஸகாரத்திற்குப் பதிலாக ஷகாரம் (புருஷசப்தத்தில்) பிரயோகிக்கப்படுகிறது. 'நான் பூர்வத்திலிருந்து இங்கு இருக்கிறேன்' என்றதால் புருஷன் எனப்படுவதாகவும் கொள்ளலாம். அதிகமாக அளிப்பவனுகையால் ('புரு ஸநோதீதி புருஷ:' என்னும் வ்யுத்பத்தியின்படி) விஷ்ணு புருஷன் எனப்படுவதாகவும் கொள்ளலாம். பூர்ணனுயிருக்கையாலும் புருஷன் ஆகிறுன் விஷ்ணு. சார்ங்கமென்னும் வில்லாண்டவனுக்குப் புராணனுயிருக்கையாலும் புருஷன் என்னும் பெயர் வழங்குகிறது. இப்புருஷசப்தம் ரூடியினுல் ஜநார்த்தனனைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம்.]

என்றும்;

பூதைர் மஹத்பிர் ய இமா: புரோ விபு:
நிர்மாய சேதே யதமூஷு: பூருஷ:।
ஸ்வாம்சேந விஷ்ட: புருஷாபிதாநம்
அவாப நாராயண ஆதிதேவ:॥
பூதைர் யதா பஞ்சபிராத்மஸ்ருஷ்டை:
புரம் விராஜம் விரசய்ய தஸ்மிந்
ஸ்ருஷ்ட்வா ஸ்வஸக்த்யேதமநுப்ரவிஷ்ட:
சதுர்விதம் பரமாத்மாப்ஸமேகு
அதோ விதுஸ் த்வாம் புருஷம்......

– (பாகவதம்)

[பெரிதான பஞ்ச பூதங்களால் அண்டங்களாகிய இப்புரங்களை ஸ்ருஷ்டித்து ஸர்வவ்யாபியான புருஷன், தன்னுடைய ஏக தேசத்தால் அவைகளை வியாபித்துக்கொண்டு சயனித்துக்கொண்டிருக்கிறுன். (ஆகையால்) ஆதிதேவனுன நாராயணன் புருஷன் என்னும் பெயரை அடைந்தான். தன்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட பஞ்ச பூதங்களால் ஒளியுள்ள இவ்வண்டத்தை நிர்மாணம் செய்து, அதில் தேவ மனுஷ்ய திர்யக்ஸ்தாவர ரூபமான சதுர்வித சேதனர்களையும் ஸ்ருஷ்டித்து, தன்னுடைய சக்தியால் அவற்றை வியாபித்து விளங்குவதால் உன்னைப் புருஷன் என்று அறிகிறுர்கள்.]

என்றும்;

ய ஏவ வாஸுதேவோயம் புருஷ: ப்ரோச்யதே புதை:।
ப்ரக்ருதி ஸ்பர்சராஹித்யாத் ஸ்வாதந்த்ர்யாத் வைபவாதபி॥
ஸ ஏவ வாஸுதேவோயம் ஸாக்ஷாத் புருஷ உச்யதே।
ஸ்த்ரீப்ராயமிதரத் ஸர்வம் ஜகத் ப்ரஹ்ம புரஸ்ஸரம்॥
ப்ரஹ்மாத்யா தேவதாஸ்ஸர்வா யக்ஷ தும் புருமானுஷா:।
தே ஸர்வே புருஷாம்சத்வாத் விச்ருதா: புருஷா: இதி॥

– (நாரஸிம்ஹபுராணம்)

[எவனொருவன் வாஸுதேவன் எனப்படுகிறுனே அவனே புருஷன் என்றும் ஞானிகளால் சொல்லப்படுகிறுன். ப்ரக்ருதி ஸ்பர்ச மற்றவனுயிருக்கையாலும், ஸ்வதந்த்ரனுயிருக்கையாலும், பெருமையையுடையவனுயிருக்கையாலும் அந்த வாஸுதேவனே ஸாக்ஷாத் புருஷனுகச் சொல்லப் படுகிறுன். பிரமனை முன்னிட்ட எல்லா உலகம் ஸ்த்ரீ ப்ராயர்களே.

பிரமன் முதலிய எல்லா தேவதைகளும், யக்ஷர்கள், தும்புருக்கள், மனுஷ்யர்கள் ஆகிய எல்லாரும் புருஷனுடைய அம்சத்தைப் பெற்றிருக்கையால் புருஷன் என்று சொல்லப் படுகிறார்கள்.] என்றும்;

தஸ்யைகஸ்ய மஹத்வம் ஹி ஸ சைக: புருஷ: ஸ்ம்ருத:। மஹாபுருஷசப்தம் ஹி பிபர்த்யேக: ஸநாதந:. ॥ ஸ ஹி நாராயணோ ஜ்ஞேய: ஸர்வாத்மா புருஷோ ஹி ஸ:।

— (மஹாபாரதம்.)

[அவன் ஒருவனுக்கே பெருமை யுண்டு; அவன் ஒருவனே புருஷன் எனப்படுகிறான். ஸநாதனனான அவன் ஒருவனே மஹா புருஷ சப்தத்தை தரிக்கிறான். அவனே நாராயணன் என்று அறியத் தக்கவன்; ஸர்வாந்தர்யாமியான புருஷனன்றோ அவன்.] என்றும்;

அந்யநாம்நாம் கதிர் விஷ்ணுரேக எவப்ரகீர்த்தித:। ருதே நாராயணாதீநி நாமாநி புருஷோத்தம:॥ ப்ராதாதந்யத்ரபகவாந்' என்றும்;

[மற்றதெய்வங்களின் நாமத்திற்கும் விஷ்ணு ஒருவனே கதியாகக் கீர்த்திக்கப் படுகிறான். நாராயணாதிகளான சில அஸாதாரணமான பெயர்களைத் தவிர்த்து மற்றப் பெயர்களை பகவான் புருஷோத்தமன் மற்றவர்களுக்குக் கொடுத்தான்.] என்றும்;

ததேவ பகவத் வாச்யம் ஸ்வரூபம் பரமாத்மந:। வாசகோ பகவச்சப்தஸ் தஸ்யாத்யஸ்யாக்ஷயாத்மந: ॥ — (விஷ்ணு புராணம்)

[அந்த பரமாத்ம ஸ்வரூபமே பகவான் எனப்படுவது. அழிவற்றவனான அந்த ஆதி புருஷனுக்கே வாசகமாயிருப்பது பகவச்சப்தம்.] என்றும்;

பகவாநிதி சப்தோயம் ததா புருஷ— இத்யபி। நிருபாதீ ச வர்த்தேதே வாஸுதேவே ஸநாதநே ॥ — (வராஹ புராணம்.)

[பகவான் என்னும் சப்தமும், புருஷன் என்னும் சப்தமும் இயற்கையாகவே பழமையானவனான வாஸுதேவனிடமே விளங்குகின்றன.] என்றும்;

'ப்ருஹத்வம் ச ஸ்வரூபேண குணை: ச யத்ர அநவதிகாதிசயம் ஸோஸ்ய முக்யோர்த்த:। ஸ ச ஸர்வேச்வர எவ । அதோ ப்ரஹ்மசப்த: தத்ரைவ முக்ய வ்ருத்த:। தஸ்மாத் அந்யத்ர தத்குணலேசயோகாத் ஔபசாரிக: ...பகவச்சப்தவத்। — [ஸ்ரீ பாஷ்யம்.]

[ஸ்வரூபத்தினாலும், குணத்தினாலும் எல்லையற்ற மேன்மையுடைய பெரிய தன்மை எவரிடம் இருக்கிறதோ அவரே ப்ரஹ்ம சப்தத்திற்கு முக்யமான உரிமையுடையவர். அவர் ஸர்வேச்வரனே. ஆகையால் அவரையே ப்ரஹ்ம சப்தம் முக்யமாய்க்கூறுகின்றது. பகவச் சப்தம் போல் ப்ரஹ்ம சப்தமும், மற்றவர்களிடத்தில் பெரிசாயிருக்கும் தன்மை லவலேசம் இருப்பதால் உபசாரமாக உரைக்கப் பெறுகிறது. வாஸ்தவமாக அவர்கள் பகவானும் அல்ல; ப்ரஹ்மமும் அல்ல அப்படிச் சொல்லும் இடங்களில் மரியாதைக்காகவே சொல்லப் பெற்றிருப்பதாக்கொள்ளவேணும்.] என்றும் கூறுவதிலிருந்து பகவான், புருஷன் என்றும் இவ்விரு பதங்களும் முக்யமாக நாராயணனையே குறிக்கும் என்பது தெளியலாம்.

'பகவாந்' என்பது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் ஒன்று. அதற்குரிய பாஷ்யம் பின்வருமாறு —

'563. பகவாந். ஹரிவம்சத்தில் சொல்லியபடி, 'பகம்' என்னப்படும். பூர்ணமான ஐச்வர்யம், தர்மம், கீர்த்தி, லக்ஷ்மி, வைராக்யம், மோக்ஷம் ஆகிய ஆறு குணங்களும் பொருந்தினவர். விஷ்ணு புராணத்தில் சொல்லியபடி, பிராணிகள் உண்டாவதையும் அழிவதையும் வளர்வதையும், தேய்வதையும், ஞானத்தையும் அஞ்ஞானத்தையும் அறிபவர். (சங்கரபாஷ்யம்)

குற்றங்களனைத்தையும் ஒழித்து கல்யாண குணங்களை நிரப்பின ஸ்வரூபமாதலின், மிகவும் பூஜிக்கத் தக்கவர், (பட்டர் பாஷ்யம்.)

'அந்தமிலாதியம் பகவன்' என்பது திருவாய்மொழி (1-3-5) இதன் வியாக்கியானங்களை ஈண்டுத் தருவேன்.

'தனக்கு அந்தமின்றி எல்லார்க்கும் தான் ஆதியாய் ஸ்வாபவிகமாய் ஹேய ப்ரத்யநீகமான ஜ்ஞாநாதி கல்யாண குணபரி பூர்ணன்' (ஒன்பதினாயிரப்படி) (தொடரும்)

ஸ்ரீ:

செய்திகள்

41—வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்

ஸ்ரீ அஹோபிலமடத்தில் 41—வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் வருஷ திருநக்ஷத்திரம் மேலக்கோட்டையில் *3-1-54* ல் வேத, ப்ரபந்த, புராண, க்ரந்த சதுஷ்டய பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு மேலக்கோட்டையிலேயே 4 நாள் நடந்து பிறகு ஸஞ்சாரக்ரமத்திலேயே நடந்துகொண்டுவந்து ஸோஸலேயில்திருநக்ஷத்திரம் சாற்றுமறையுடன் 10-1-54 ல் விசேஷமாக நடந்தது. ததீயாராதனமும் வெகு விமர்சையாக நடத்தப்பட்டது. பாராயணத்தில் பல ஸ்வாமிகள் மிகவும் குதூஹலத்துடன் அந்வயித்தார்கள். (ஸ்ரீஅழகிய சிங்கரின் பூர்வாச்ரம குமாரர்] ஸ்ரீ. உ.வே. கோபாலரங்காசாரியர் ஸ்வாமியும் கூட இருந்து அநுபவித்தார். ஷை திருநக்ஷத்திரம் தங்களூரில் நடந்ததைப்பற்றி ஸோஸலேவாஸிகள் 'தங்களுடைய பாக்யம்' என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் விஜ்ஞாபித்துக் கொண்டார்கள். பிறகு T நரஸிப்பூரில் சட்டஸபை மெம்பர் ஸ்ரீ ராஜகோபால அய்யங்கார் தகப்பனர் முத்தண்ணு என்கிற ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசரியர் க்ருஹத்தில் எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமியும் விசேஷமாக ஆராதித்தார். அந்த ஸ்வாமி முதலானவர்கள் தை மீ ஸதஸ் வரை தங்களூரிலேயே எழுந்தருளி இருக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். பெருமாள் நியமனத்தின் பேரில் கோயம்புத்தூருக்கே எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஒரு திருவாபரணம் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தார். பெருமாளுக்கு ஸொந்தமாயும் T நரஸிப்பூருக்கு அருகாமையிலுள்ள நாலு கிராமவாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க ஸ்ரீஅழகியசிங்கர் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அந்த கிராமங்களுக்கு எழுந்தருளியாயிற்று. அவர்களால்ஸமர்ப்பிக்கப்பட்டகாணிக்கைகளையும் பெற்றுக்கொண்டு அவர்களால் ப்ரார்த்திக்கப்பட்ட சிலகாரியங்களை கவனித்துச் செய்வதாக நியமித்துவிட்டு மறுபடியும் T நரஸிப்பூருக்கு எழுந்தருளியாயிற்று. குஞ்சா ந்ருஸிம்ஹன் அவ்வூர் மடத்திற்கு தீர்த்தவாரி உத்ஸவத்திற்கு எழுந்தருளுவதைக் கேள்வியுற்று வெள்ளத்தினல் விழுந்துபோன மடத்தின் மதிள் சுவரை கட்டும்படி தகுந்த மனுஷ்யர்களை நியமித்தாயிற்று.

தட்டை லக்ஷ்மீநரஸிம்ஹன்.

வேதாந்த க்ரந்த பரீக்ஷை
ஸ்ரீரங்கம்

இவ்வருஷம் கடந்த ஐப்பசி மாதத்தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீ பௌண்டரீகபுரம் ஸ்வாமி ஆச்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் திருவத்யயநத்தின் பொழுது நடந்த ஸதஸ்ஸில், பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்யேத்யாதி ஸ்ரீ நடாதூர் ஆண்டவன், 'ஸ்ரீ ந்யாயபரிசுத்தியில்' லேகந பரீக்ஷையை நடத்தி, ஸம்பாவனையையும் செய்தருளியாயிற்று. வரப்புகுரும் வருஷத்திலும், ஸ்ரீ தத்வமுக்தாகலாபத்தில் 'புத்தி ஸரம்' முழுமையும் 'ஸ்ரீ அதிகரண ஸாராவளியில்' முதல் அத்யாயமும், பரீக்ஷைக்குரிய ஸ்தலங்களாக நிர்ணயிக்கப்பட்டு இருக்கின்றன. ஆசார்யவான்களான அஸ்மத் ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவரும் அதில் அந்வயிக்கக் கோரப்படுகின்றனர்.

இப்படிக்கு ஒரு நிருபன்
ஸ்ரீரங்கம்.

1-3-54

'சிங்கவேழ் குன்றம்' என்னும்
ஸ்ரீ அஹோபிலம் லக்ஷ்மீந்ருஸிம்ஹனின்
ப்ரஹ்மோத்ஸவம் **8-3-54.** முதல்
21-3-54. வரை—

இத்திருப்பதியில் எம்பெருமானிடம் திருமங்கை மன்னனுக்கு ஈடுபாடு மிக உண்டு. பெரியதிருமொழியில் 'அங்கண்ஞாலம்' என்று தொடங்கும் பத்துப் பாசுரத்திலும் அன்புடையார் ஆழங்கால்படுவர்.

இவ்வருஷமும், கீழும் மேல் திருமலையிலும், நரசிங்கன் ப்ரஹ்மோத்ஸவம் கண்டருளினன். 'பாஞ்சராத்ரத்தில்' தீக்ஷை பெற்றோர் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்துடன் எழுந்தருளியிருந்து சாஸ்த்ரமுறைப்

ஸ்ரீ:

கும்ப மேளா

தென்தேசத்தில் அர்த்தோதய மஹோதய புண்ய காலங்களில் திருவணைப்போன்ற புண்ய ஸ்தலங்களிலும் 'மாமாங்க' மென்று ஸாதாரண ஜனங்களால் வழங்கப்படும் மஹாமக மென்ற காலத்தில் திருக்குடந்தையில் கூடுகிற கூட்டங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். மஹாமக மென்பது திருக்குடந்தையில் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு தடவை கொண்டாடப்படுகிறது. அந்த ஸமயம் கங்கைமுதலான புண்ய நதிகள் மஹாமக குளத்திற்கு வருவதாகவும் பாபங்களை போக்கடிக்கக் கூடிய மஹாமகக்குளத்தில் நீராடுதல் ஸர்வபாபநாசனமென்றும் அதிபாவனமென்றும் சில ஸ்தல புராணங்களில் சொல்லப்படுவதால் அந்த ஸமயங்களில் தென்தேசத்து ஜனங்கள் பதினாயிரக்கணக்காக திருக்குடந்தையில் கூடுகிறார்கள். இதனால் பெரிய கூட்டமென்று சொல்ல வேண்டுமானால் மஹாமகக் கூட்டமென்று சொல்லும் வழக்கம் ஏற்பட்டு விட்டது.

கும்பமேளா ஸமயத்தில் அலஹாபாத் என்று சொல்லப்படும் ப்ரயாகை க்ஷேத்திரத்தில் கூடும் ஜனங்களின் ஸங்க்யையோ லக்ஷக் கணக்கில்தான் சொல்லவேண்டும். விஜய வருஷத்தில் நிகழ்ந்த கும்பமேளாவிற்கு மொத்தம் வந்த ஜனங்கள் கோடிக்கணக்கில் இருந்ததாகத்தெரிகிறது. 1954 வருஷம் பிப்ரவரிமீ 3 உ அமாவாஸை இவ்வருஷத்திய கும்பமேளாவின் ப்ரதான பர்வகாலம். அந்ததினத்தில் மட்டும் 60லக்ஷஜனங்கள்ப்ரயாகையில் நீராடினதாக கேள்விப்படுகிறோம். இந்த பூலோகத்திலேயே எந்த தேசத்திலும் ஒரு தர்ம காரியமாக இவ்வளவு ஜனங்கள் ஒரே நாளில் கூடுவது இதுவரையில் பார்த்தது மில்லை கேட்டது மில்லை. கர்ம பூமியாக கருதப்படுகிற நம் பாரத கண்டத்திற்கே இது ஒரு அஸாதாரணமான சிறப்பு.

மேளா என்றால் ஹிந்தி பாஷையில் 'உத்ஸவத்திற்காக கூடும்கூட்ட'மென்று பொருள். கும்பமென்றால் 'அம்ருதகும்ப'மென்றுபொருளாம். மாசி மாதத்திற்கு கும்பமென்று ஒரு பெயருண்டு. ஆனால் இந்த கும்பமேளாவின் புண்யகாலமோ மகரஸங்க்ராந்தியின்பொழுதே ஆரம்பித்து நடுவில் வந்த சந்த்ரக்ரஹண புண்யகாலமும் வஸந்த பஞ்சமியும் ப்ரதான தினங்களாய் விளங்க, பிப்ரவரி மாதம் 17உ பௌர்ணமி தினம் முடிவடைந்தது. வட தேசத்தில் பெரும்பாலும் மாதங்கள் சாந்த்ரமானமாகவும் தென்தேசத்தில் பெரும்பாலும் ஸௌரமானமாகவும் இருந்து வருகிறது. அம்ருதகும்பமானது முக்யமாக ப்ரயாகையிலும் கொஞ்சம் கொஞ்சம் ஹ்ருஷீகேசத்திலும் உஜ்ஜயினியிலும் நாஸிகையிலும் ஸம்பந்தப்பட்டதாகவும் அதனால் அந்த இடங்களில் மூன்று வருஷத்திற்கு ஒரு முறை பாதகும்பமென்றும், அர்த்த கும்பமென்றும்கொண்டாடப்படுகிறது. பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருதடவை கொண்டாடப்படும் மஹாமகம் போல் ப்ரயாகை க்ஷேத்திரங்களுக்கு ராஜாவான கங்கா யமுனை ஸரஸ்வதியின் ஸங்கமத்தில் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை கூடும் கும்பமேளாதான் மற்றவைகளைக்காட்டிலும் முக்யமானது. அதிலும் இந்த வருஷம் மேளாவில் ஏற்பட்ட சில க்ருஹ யோகங்கள் 100 வருஷத்திற்கு ஒரு தடவைதான் ஏற்படுகிறதாகச் சொல்லுகிறார்கள்.

இரண்டு நதிகள் கூடுகிற இடங்களெல்லாம் ப்ரயாகைஎன்று சொல்லப்படுகின்றன. அவைகளுக்குள் முக்யமானது 'ப்ரயாகராஜ்' என்று கூறப்படுகிறதுகங்கையும் யமுனையும் ஸரஸ்வதியும் கூடும் இடம். இந்த மூன்று நதிகளில்

படி கைங்கர்யம் செய்தனர். ஸ்ரீ மடத்தின் அதிகாரிகளால் ஸேவார்த்திகளுக்கு ஸௌகரியம் நன்றாகச் செய்யப் பெற்றிருந்தது. திரள் திரளாக பக்த ஜனங்கள், இவ்வுத்ஸவத்தில் நரசிங்கனின் ஒன்பது திருமூர்த்தியையும் பக்திப் பெருக்குடன் அநுபவித்து மகிழ்ந்தனர். அவ்வடியார்குழாங்களுடன் ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹனை ஸேவித்தோர் 'கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்; தொண்டீர் எல்லீரும் வாரீர்' என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்தனர்.

வி. வாஸுதேவன்.

வ்யக்தமாக கண்ணுக்குத் தெரிவது கங்கையும் யமுனையும்தான். ஸரஸ்வதி அந்தர்வாஹினியாக இருப்பதாக ஐதிஹ்யம். சில பண்டிதர்கள் யமுனா ஸங்கமத்தில் உள்ளே குப்தையான (மறைந்த) ப்ரஹ்ம வித்யையான ஸரஸ்வதியை வஹித்துக்கொண்டு அதிமஹநீயர்களான ஸாதுக்களும் எழுந்தருளுகிறபடியால் கண்ணுக்குத் தெரியாத ஸரஸ்வதியின் சேர்க்கை கங்கா யமுனா ஸங்கமத்தில் ஏற்படுகிறதென்று உத்ப்ரேக்ஷிக்கிறார்கள். இரண்டு ஸமுத்திரங்கள் கூடுகிற இடத்தை உயர்த்தியாக ச்ருதி சொல்லுகிற மாதிரி இரண்டு நதிகள் கூடுகிற இடத்தையும் உயர்த்தியாகச்சொல்லுகிறது. இது விஷயமான ச்ருதி வருமாறு:—

'सिता सिते सरिते यत्र संभवे
तत्राप्लुतासो दिवमुत्पतन्ति ।
ये वै तन्वं विसृजन्ति धीराः
ते जना सोऽमृतत्वं भजन्ते' ॥

இந்த ச்ருதியின் தாத்பர்யம்:—வெண்மை நிறமுள்ளதும் கருமைநிறமுள்ளதுமான நதிகள் எங்கு கூடுகின்றனவோ அங்கே நீராடினவர்கள் தேவலோகத்திற்கு கிளம்புகிறார்கள். எந்த ஜ்ஞானிகள் அவ்விடத்தில் சரீரத்தை விடுகிறார்களோ அவர்கள் அம்ருதத்தை அடைகிறார்களென்று. கங்கா ஜலம் வெண்மை என்றும் யமுனாஜலம் கருமை என்றும் ப்ரத்யக்ஷஸித்தம். ஸரஸ்வதியும் கங்கையும் யமுனையும் சேருமிடத்தில் நீராடுகிறவர்களின் சரீர மலமும் மானஸிக மலமும் எப்படி கழிகின்றனவோ அதே மாதிரி ஆத்மஜ்ஞானமும் நிஷ்காம கர்மமும் பொருந்திய பக்தி ப்ரபத்தியில் ஈடுபட்டவர்களுடைய ஸகல ஆத்யாத்மிக மலங்களும் கழிந்து அவர்கள் எம்பெருமானுடைய திருவடியை அடைகிறார்கள் என்பதில் ஐயம் ஏது.

கும்பமேளாவானது ஆதிசங்கராசார் நாள் முதல் ஏற்பட்டதாக சிலர் நினைக்கிறார்கள். இதிஹாஸ புராணங்களிலேயே வ்யாஸ பகவான் இதைப்பற்றி சொல்லியிருப்பதாக கூறப்படுகிறது. ஹர்ஷசரித்திரத்திலும் இப்பேர்ப்பட்ட மேளாஸமயத்தில் ப்ராஹ்மணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் ஹர்ஷசக்ரவர்த்தி தானதர்மங்கள் செய்ததாக எழுதப்பட்டிருக்கிறது. போக்குவரத்திற்கு விசேஷ ஸாதனங்களில்லாத பழைய நாளில் ஸாதுக்களும் ஸந்யாஸிகளும் பன்னிரண்டு வருஷத்திற்கு ஒரு தடவையாவது இந்த இடத்தில் ஒன்று கூடுவதென்பது இயற்கைக்கு பொருந்திய ஏற்பாடுதான்.

இதுவரையில் நிகழ்ந்த ஒரு கும்பமேளாவிலாவது ஏற்படுத்தப்படாத அநேக விசேஷ ஏற்பாடுகள் இந்த தடவை ஏற்படுத்தப்பட்டன. கங்கா ப்ரவாஹத்தைத் தாண்டி கங்கா தடாகத்திலுள்ள மேளா நடக்குமிடத்திற்கு சுலபமாகப் போய் வரும்படி புதிதாக ஆறு பாலங்கள் ராணுவத்தினால் கட்டப்பட்டிருந்தன. போவதற்கு ஒரு பாலமும் வருவதற்கு ஒரு பாலமுமாக வகுக்கப்பட்டிருந்தது. மேளா நடக்குமிடத்தில் விச்வகர்மாவின் ஸ்ருஷ்டி மாதிரி கடைகள் கடைத்தெருவுகளுடன் ஒரு பெரிய நகரமே நிர்மாணமாகியிருந்தது. பரதகண்டத்தில் மூலைக்கு மூலையிலுள்ள ஸாதுக்களும் ஸந்யாஸிகளும் பைராகிகளும் ஆங்காங்கு கூடாரங்கள் போட்டுக்கொண்டு தங்கள் தங்கள் சிஷ்யர்களுக்கு அன்னதானம் செய்வதுடன் ஸதுபதேசமும் செய்துகொண்டிருந்தார்கள். எங்கே பார்த்தாலும் உரக்கப் பேசும் ஸாதனங்களுடன் (Loud Speaker) ப்ரவசனங்களும் ஸ்தோத்ர கோஷங்களும் நிறைந்திருந்தன. கங்கையே பக்கத்தில் ஓடும் பொழுதும் முடியாதவர்களுக்கு கங்கை வரையில் போகும் ச்ரமமில்லாமல் குழாய் ஜலவசதியும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. துர்கந்த லேசமில்லாமல் சௌசாதி ஸௌகர்யங்களும் வேண்டிய அளவு இருந்தன. ராத்திரி வேளைகளில் பார்த்தால் மேளா பூமியானது மின்சார வெளிச்சங்களால் மின்னிக்கொண்டு அமராவதியோ அளகாபுரியோவென்று சங்கிக்கும்படி காக்ஷி அளித்தது.

இதுவரையுமில்லாமல் இத்தனை அத்புதமான ஏற்பாடுகள் ராஜாங்கத்தினால் செய்யப்பட்டிருந்தும் குழந்தைகளும், ஸ்திரீகளும் கிழவர்களும் ஜனநெருக்கத்தினால் ஸங்கம கட்டத்திலேயே ஸ்நானத்திற்காக வந்தவர்களால் மிதியுண்டு மாண்டனர் என்பது ஓர் களங்கமாகும். இதைப்பற்றி ஒரு கமிட்டி விசாரணை செய்துகொண்டிருப்பதால் யாருடைய குற்றத்தினால் இந்த ஸம்பவம் நிகழ்ந்தது என்பதை இப்பொழுது கூறமுடியாது.

முக்கியமாக ஒரு விஷயத்தைப் பற்றிமட்டும் சொல்லாமலிருக்க முடியவில்லை. இம்மாதிரி மேளாக்களுக்கு நாகர்கள் என்று சொல்லப்படும் நக்னமான சில திகம்பரசாமியார்கள் வருகிறார்கள். இவர்களில் பலர் கையில் கபாலமும் சூலமும் தலையில் ஜடையும் உடம்பில் சாம்பலும் தரிக்கிறபடியால் இவர்கள் காபாலிகளோ பாசுபதர்களோ என்று ஸந்தேகிக்க இடமுண்டு. வைதிகர்களெல்லாம் இம்மதங்களை கண்டித்தார்கள். குருட்டு விச்வாஸமுள்ளபல ஜனங்களுக்கு இந்த திகம்பரர்களிடம் ஒரு மஹத்வ புத்தி இருப்பது கலியின் கோலாஹலக்கிரீடைகளி லொன்று.

முதல் ஸ்னான மரியாதை இந்த திகம்பரர்களுக்குத்தான் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இவர்களின் தர்சனார்த்தமாக கூடும் கூட்டத்தில்தான் மேற்படி ஸம்பவம் நடந்தது.

அவரவர்களின் புத்தி வைசித்ரியத்துக்கு தகுந்தபடி நம் மதத்தில் ஏற்பட்டிருக்கும் அவாந்தர தருமங்களுக்கெல்லாம் கும்பமேளாவில் ப்ரதிநிதித்வம் இருந்தது. பல மஹாநாடுகளும் நடைபெற்றன அவைகளுள் முக்கியமானவை சோவத நிஷேதத்திற்காக கரபாத்திரிஸ்வாமியினுடைய தலைமையில நடந்தமஹாநாடும் பூரிசங்கராசாரியர் ஸ்வாமிகள் தலைமையில்நடந்த ராஷ்டிரீய ஆத்யாத்மிக பார்லிமெண்டும் விசேஷமாக குறிக்கத்தக்கவை. வைதிகஸபைகளின் சார்பாக சில ப்ரதிநிதிகள் ப்ரதான மந்த்ரி நேருவையும் இன்னும் சில அரசியல் தலைவர்களையும் பேட்டி கண்டு கோவத நிஷேதம் விவாஹாத்து முதலிய விஷயங்களைப் பற்றி வைதிகர்களின் கொள்கைகளை வற்புறுத்தினார்கள்.

நம் ஸ்ரீ பாஷ்யகாரர் தர்சனத்தில் ஸ்ரீ தேசிக ஸம்ப்ரதாயத்தின் சார்பாக நடந்த சில காரியங்கள் இங்கே அவச்யம் கூறவேண்டியவை. உத்திர அஹோபிலமட மென்று சொல்லப்படும் ஸ்ரீ புஷ்கரக்ஷேத்திரத்தின் மடாதிபதியான ஸ்ரீ வீரராகவாசாரிய ஸ்வாமி மேளா பூமியில் ப்ரத்யேகமாக ஒரு ஸ்தானத்தில் தென்தேசத்து ஸ்ரீ வைஷ்ணவர்களின் உதவியின் பேரில் ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹா மந்த்ர யஜ்ஞம் ஒன்று நடத்தினர். அது ஸம்பந்தமாக வேதகோஷமானது (Loud Speeker) லௌட் ஸ்பீகர் மூலமாக ஸுஸ்வரத்துடன் வேத ஒலியை எங்கும் பரவச்செய்தது ஜனங்களுக்கெல்லாம் சித்தாகர்ஷகமாக இருந்தது. மஹாகும்ப பர்வமான பிப்ரவரி மாதம் 3௨ அமாவாஸை யன்று யஜ்ஞத்திற்காக வந்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்களெல்லோரும் தனிப் படகில் ஸங்கமத்திற்கு நீராடப்போய் திரும்பி வரும் பொழுது ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்திகளையும் சாற்றுமுறை பாசுரங்களையும் கம்பீரமாக ஸேவித்துக்கொண்டு வந்தது கண்டவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் இது என்ன அபூர்வமான காக்ஷி யென்று ஆச்சரியப்படும்படி இருந்தது. படகில்போன ஸ்ரீவைஷ்ணவர்களுக்கோ ,இங்கே திரிந்தேற்கிழுக்குற்றென் என்னும்படி பரமபதத்தில் இதைக் காட்டிலும் உயர்ந்த ஆநந்தம் என்ன இருக்கப்போகிறதென்று புளகாங்கிதமாகயிருந்தது.

வஸந்த பஞ்சமி அன்று அகில பாரதவர்ஷீய ஸ்ரீ ராமானுஜீய வைதிக ஸ்ரீ வைஷ்ணவ சங்கமென்று ஒரு சங்கம் ஏற்படுத்தப்பட்டது. வஸந்த பஞ்சமி அன்று 'அமுதத்தில் பிறந்தவள்' அவதரித்ததாகச் சொல்லுகிறார்கள். **'संघे शक्तिः कलौ युगे'** என்று பூர்வர்களின் வாக்யம். ஸங்கத்தின் சார்பாக ஸ்ரீ தேசிகஸம்ப்ரதாயத்தின் ப்ரசாரத்தின் பொருட்டு பாலமுகுந்த ஸந்தேசமென்று ஒரு மாதப் பத்ரிகையை வெளியிடுவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ ப்ரயாகை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ கீதாம்ருதத்தை ஸ்ரீதேசிக ஸித்தாந்தாநுகுணமாக விதரணம் செய்வதின் பொருட்டு அலஹாபாத் ஸர்வ கலாசாலையிலும் ஸ்ரீ கோவிந்தாசாரிய ஆச்ரமத்திலும் ஸ்ரீ கீதையின் ப்ரவசனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் பம்பாயிலுள்ள ஸ்ரீ க்ருஷ்ண ஸபையின் ஆதரவில் நடக்கும் ஸ்ரீ கீதாமிஷன் மூலமாக செய்யப்பட்டன. பாலமுகுந்த ஸந்தேசமும் கீதாம்ருதத்தின் ப்ரசாரமும் திகந்த வ்யாபியாக ஆகவேண்டுமென்று ஆசாஸிக்கப் படுகிறது.

रामानुजार्यं दिव्याज्ञा वर्धतां अभिवर्धताम् ।
दिगन्तव्यापिनी भूयात् सा हि लोक हितैषिणी ॥

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

4–3–54 இரவு சந்திரசேகரபுரத்திலிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள ஒத்தப்பாலத்தில் ஸ்ரீ சங்கர அய்யர் பங்களாவிற்கு எழுந்தருளினார். மறுநாள் இரவு புறப்பட்டு 6 மைல் தூரமுள்ள கவளப்பாரை புது அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினார். 6உ பகல் 3 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள பட்டாம்பியில் ஆற்றங்கரைச் சத்திரத்திற்கு எழுந்தருளினார். 7உ திருவித்துவக்கோட்டு தேவஸ்தான அதிகாரிகள் மேற்படி திருவித்துவக்கோட்டெம்பெருமானை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளவேண்டும் என்று ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் ஸகல பிருதுகளுடன் ஆற்றுக்கு அக்கரையில் 2 மைலில் உள்ள திருவித்துவக்கோட்டுக்கு எழுந்தருளினார். தேவஸ்தான அதிகாரிகள் எதிர்கொண்டு வரவேற்றார்கள். திருப்பல்லாண்டு தொடங்கி 'தருதுயரம் தடாயேல்' என்கிற (குலசேகர) பெருமாள் திருமொழி பாசுரங்களை கோஷ்டியாக அநுஸந்தித்து மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. இக்கோயிலில் தர்மபுத்ரர் முதலிய பாண்டவர்களொவ்வொருவராலும் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட விஷ்ணு ஸந்நிதிகள் தனித்தனியாக அமைந்து இருக்கின்றன. இவைகளுள் அர்ஜுனனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸந்நிதியே ப்ரதானம் என்று சொல்லுகிறார்கள். அன்றிரவு பட்டாம்பியிலிருந்து புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள குடல் என்னுமிடத்தில் ஆற்றங்கரை மாந்தோப்பிற்கு எழுந்தருளினார். 8உபகல் இஜ்யாராதனம் ஆனதும் ஸ்ரீ அழகியசிங்கர் ஆற்றுக்கு எதிர்க்கரையில் 5 மைலிலுள்ள திருநாவாய்க்கு எழுந்தருளினார். அக்கோயிலில் தேவஸ்தான அதிகாரிகள் ஸகல பிருதுகளுடன் ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்க்கொண்டு 'நாவாயுளானை' மங்களாஶாஸநம் செய்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் நாவாயுளானை திருப்பல்லாண்டு தொடங்கி 'அறுக்கும் வினையாயின' என்கிற திருவாய்மொழி பாசுரங்களையும் 'தூவாய்புள்ளூர்ந்துவந்து' முதலிய பெரிய திருமொழி பாசுரங்களையும் கோஷ்டியாக அநுஸந்தித்து மங்களாஶாஸநம் செய்தருளியாயிற்று. மறுபடியும் குடல் மாந்தோப்பிற்கு எழுந்தருளி அன்றிரவே 5 மைல் தூரமுள்ள குமரநல்லூருக்கு எழுந்தருளினார். 9உ இரவு அங்கிருந்து புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள பூவல்லி மனையில் ஸ்ரீ பி. எம். வாஸுதேவநம்பூதரிவகையாவைச்சேர்ந்த தர்மசத்திரத்திற்கு எழுந்தருளி அவர்களால் இரண்டு தினங்கள் ஆராதிக்கப்பட்டார். அங்கிருந்து 17 மைல் தூரமுள்ள குருவாயூரில் தேவஸ்தான சத்திரத்திற்கு எழுந்தருளினார். 12உ காலை மேற்படி குருவாயூர் தேவஸ்தான அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரை கோவிலுக்கு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்ததின் பேரில் பகல் நான்கு மணிக்கு கோயிலுக்கு எழுந்தருளியாயிற்று. கர்பக்ருஹத்திற்கு நான்கு புறத்திலும் பாகவத கதை சித்ரரூபமாக எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு பெரிய ப்ரார்த்தனை ஸ்தலம். பிறகு 10 மைல் தூரமுள்ள எரநல்லூருக்கு எழுந்தருளினார். 13உ ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள திருச்சூரில் ஸ்ரீ கணபதி அய்யர் பங்களாவிற்கு எழுந்தருளினார். பிறகு 9 மைலில் உள்ள புதுக்காட்டிற்கு அருகாமையில் அழகப்ப நகர் பங்களாவிற்கு எழுந்தருளினார். மேற்படி மில் மானேஜர் ஸ்ரீ ராமசந்த்ர அய்யர் டோலோத்ஸவம் செய்து வைத்தார். அவ்வூரிலிருந்து புறப்பட்டு 11 மைலில் உள்ள சாலக்குடியில் ஆற்றங்கரையில் கொச்சி ராஜாவின் சத்திரத்திற்கு எழுந்தருளினார். பிறகு 16உ இரவு புறப்பட்டு 12 மைல் தூரத்திலுள்ள திருமூழிக்களத்தில்கோயிலுக்குச்சொந்தமான சத்திரத்திற்கு எழுந்தருளினார். 17உ காலை தேவஸ்தான அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரை 'திருமூழிக்களத்து விளக்கினை' மங்களாஶாஸநம் செய்தருளவேண்டும் என்று ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகியசிங்கரும் ஸகலபிருது

களுடன் எழுந்தருளி திருமூழிக்களத்து விளக்கினை திருப்பல்லாண்டு தொடங்கி 'எங்கானலகங்கழிவாய்' என்கிற திருவாய்மொழி பாசுரங்களையும் 'பனியேய்' முதலிய பெரிய திருமொழி பாசுரங்களையும் 'பொன்னாய்' என்கிற திருநெடுந்தாண்டக பாசுரத்தையும்கோஷ்டியாக அநுஸந்தித்து மங்களாஶாஸநம் செய்தருளியாயிற்று. அவ்வூரிலிருந்து அன்று இரவே புறப்பட்டு 9 மைலில் உள்ள ஆள்வாயில் திருவாங்கூர் மஹாராஜாவின் சத்திரத்திற்கு எழுந்தருளினார். 19 உ திருமுடி விளக்கம் ஆயிற்று. அன்றிரவே புறப்பட்டு 8 மைலில் உள்ள திருக்காட்கரையில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த கட்டிடத்திற்கு எழுந்தருளினார். 20 உ கோயில் தேவஸ்தான அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரை திருக்காட்கரை 'என்னப்பனை' மங்களாஶாஸநம் செய்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்க ஸ்ரீ அழகிய சிங்கரும் ஸகல பிருதுகளுடன் கோயிலுக்கு எழுந்தருளி திருக்காட்கரை என்னப்பனை திருப்பல்லாண்டு தொடங்கி 'உருகுமால் நெஞ்சம்' என்கிற திருவாய்மொழி பாசுரங்களை கோஷ்டியாக அநுஸந்தித்து மங்களாஶாஸநம் செய்தருளியாயிற்று அன்றிரவும் ஸகல பிருதுகளுடன் கோயிலுக்கு எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தருளியாயிற்று.

திருப்புணித்துறையில் கொச்சி மஹாராஜா அன்று ஸ்வாதியானபடியால் பெரிய திருபஞ்சனம், ததீயாராதனை யாத்திரிடோலோத்ஸவம் எல்லாம் தன்னுடையதாக இருக்கவேண்டுமென்று அதற்கு வேண்டிய த்ரவ்யத்தை ஸமர்ப்பித்து ஆராதித்தார். சால்வையும் ரொக்கம் ரூபாய் 101 ம் ஒரு பவுனும் விசேஷ உபகாரங்களுடன் (பழங்களுடன்) ஸமர்ப்பித்தார். அவ்வூரிலுள்ள கலாசாலையில் ஏற்கனவே யிருந்தவர்களும், தத்காலம் இருப்பவர்களுமான ந்யாய உபாத்யாயர்கள் ஸ்ரீ அழகிய சிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்தார்கள். மஹாராஜா நல்ல விவேகியானபடியால், அவர் முன்னிலையில் ந்யாயத்தில் 'ஸித்தாந்தலக்ஷணத்தில்' வாக்யார்த்தம் நடந்தது. மஹாராஜாவும் விஷயவிசாரம் பண்ணினார். அத்வைத வேதாந்தத்தில் அத்யாஸபாஷ்யத்தில் விசாரம் நடந்தது. அன்று 3 மணிமுதல் 5 மணி வரையில் வாக்யார்த்த விசாரம் நடந்தது. கடைசியில் மஹாராஜா தனக்கு உபதேச விஷயத்தில் சில ஸம்சயமென்று ஸ்ரீ அழகியசிங்கரை பரிப்ரச்நம் பண்ணினார். ஸ்ரீ அழகிய சிங்கரும் அவருடைய ஸம்சயம் தீரும்படி பதில் அருளிச் செய்தாயிற்று. பதில் அருளிச்செய்ததைக் கேட்டு மிகவும் ஸந்துஷ்டராய் நியமனம் பெற்றுக்கொண்டார். மறுபடி ராத்திரி டோலைக்கு பெருமாளை ஸேவிக்க வந்திருந்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் தெண்டன் ஸமர்ப்பித்தார். ஸ்ரீ அழகியசிங்கரும் மஹாராஜாவிற்கு அவர்கள் பாண்டித்யத்திற்காக பஹுமானம் பண்ணி மற்றப்படி வாக்யார்த்தம் சொன்ன பண்டிதர்களுக்கும் ஸன்மானம் செய்தாயிற்று. மஹாராஜாவிற்கு ஸ்ரீ அழகியசிங்கர் தம்முடைய கல்வி திட்டத்தைக் குறித்து விரிவாக எடுத்துரைத்தாயிற்று. அதை அவர் மெச்சிக் கொண்டார். அவருக்கு ப்ராசீன ஆசாரத்தில் நம்பிக்கையோடு தானும் அதை நழுவாமல் அநுஷ்டித்து வருகிறபடியால் இந்தக் கல்வி திட்டத்தை அவர் மிகவும் புகழ்ந்தார். அங்கிருந்து அன்றிரவு புறப்பட்டு (23–3–54) 24–3–54, பரிகாவழிற்கு எழுந்தருளினார். 24–3–54 இரவு புறப்பட்டு அன்று இரவே மூவாத்துப்பிழைக்கு எழுந்தருளினார். அந்த ஊரில் ப்ரமுகராயுள்ள பர்மாஷெல் ஏஜண்டு ஸ்ரீராமஸ்வாமி அய்யர் ப்ராஹ்மண ஸமூஹத்துடனும், பூர்ணகும்பத்துடனும் ஒரு மைல் தூரத்துக்கப்பால் வந்து காத்திருந்து வாத்ய கோஷத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போய் மறுநாள் பூராவும் பெருமாளை ஆராதித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார். அவ்வூரில் ப்ரமுகராயுள்ளவர்களும், வித்வான்களும், வக்கீல்களும் பெருவாரியாக ஸ்ரீ அழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்தார்கள். இரவு டோலை முடிந்ததும் புறப்பட்டு 12 மைலுக்கப்பாலுள்ள கூத்தாட்டுக்குளம் எழுந்தருளி அங்கு நம்பூதரி இல்லத்தில் 26–3–54 தினம் ஆராதனதிகளை முடித்துக்கொண்டு 8 மைலுக்கப்பாலுள்ள கோழை சத்திரத்தில் எழுந்தருளி

யிருந்து மறுநாள் ஆராதனத்தை முடித்துக்கொண்டு ராத்திரி எத்தமானூருக்கு எழுந்தருளினர். எத்தமானூர் கலாசாலை தலைமை ஆசிரியராயிருந்த ஸ்ரீ ராகவ அய்யங்காரும் அவ்வூரிலுள்ள மற்ற ப்ரமுகர் ஸமூஹத்தைச் சேர்ந்தவர்களும் பூர்ணகும்ப, மேள வாத்யங்களுடன் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸமுதாய மடத்தில் எழுந்தருளப் பண்ணுவித்தார்கள். மறுநாள் காலை 28-3-54 கோட்டயத்தில் ப்ரமுகராயுள்ள ஸ்ரீ ராஜகோபாலஐயங்கார் எத்தமானூருக்குவந்து ஸ்ரீ அழகியசிங்கரைத்தெண்டன் ஸமர்ப்பித்து இரவு கோட்டயம் எழுந்தருளும்படி ப்ரார்த்தித்தார். அதன்படி கோட்டயத்திற்கு இரவு எழுந்தருளியாயிற்று. கோட்டயத்தில் பர்மாஷெல்ஏஜண்டும்ராஜகோபாலஅய்யங்காரும்மற்று கிராம ப்ரமுகர்களும் இரவு ஒரு மணி சுமாருக்கு ஸ்ரீ அழகியசிங்கரை 27-3-54 ராத்திரி எழுந்தருளப்பண்ணுவித்தார்கள்.

அவ்வூரிலுள்ளதீர்த்தக்கரா என்று சொல்லப்படும் மலையாளத்தில் கோட்டயம் ஸ்வாமீ (ப்ரசித்தமுள்ள சங்கர மடாதிபதி) ஸ்ரீ அழகியசிங்கரையும், பெருமாளையும் காணிக்கை ஸமர்ப்பித்து தரிசித்துப் போனர். ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் எழுந்தருளியிருக்குமிடத்தை மிகவும் அலங்கரித்து வெள்ளையடித்து பந்தலும் போட்டு வைத்திருந்தார்கள். மறுநாள் 29-3-54 ததீயாராதனமும் செய்துவைத்து டோலோத்ஸவமும் இரவு ராஜகோபாலஐயங்கார் பண்ணிவைத்தார். ஸமூக மடத்தாரும் இவ்வூர் ப்ரமுகரான கே. வெங்கடேசஅய்யரும் காணிக்கைகள் ஸமர்ப்பித்தார்கள். 30-3-54 இரவு புறப்பட்டு வாழைப்பல்லிக்கு எழுந்தருளினர். ஸ்ரீ. உப. ப்ரோகர் எம். எஸ் ராகவாசாரியர் பூர்ணகும்பத்துடன் எதிர்கொண்டழைத்து தன் இல்லத்திலேயே இடம் கொடுத்து தான் ஸமாச்ரயணம் செய்துகொண்டு இரவு டோலோத்ஸவமும் பண்ணிவைத்ததுடன் விசேஷ தளிகைகளும் பண்ணிவைத்து ஆராதித்தார். அன்று மத்தியானம் திருக்கடித்தானம் தேவஸ்தானம் ஸ்ரீகார்யம் வந்து ப்ரார்த்தித்ததின் பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் மாலை சுமார் 4 மணிக்குப் புறப்பட்டு திருக்கடித்தானம் எழுந்தருளினர். கோயில் அதிகாரிகள் கோயில் மரியாதையும் மாலை, புஷ்பங்கள் ஜோடித்து வரவேற்றார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் வலமாக கோயிலுக்குள் எழுந்தருளி திருப்பல்லாண்டு தொடங்கி ‚எல்லையம் காலையம்' என்கிற திருவாய்மொழியைக் கொண்டு கோஷ்டியாக ஆராதனை மங்களாசாஸநங்கள் செய்து கோயில் வலமாகத் திரும்பி ஸாயங்காலம் திருவாழைப்பல்லிக்கே எழுந்தருளியாயிற்று. ராத்திரி ராகவாசாரியர் டோலோத்ஸவமும்பண்ணிவைத்துவிசேஷ தளிகைகள் ஸமர்ப்பித்தார். 1-4-54 இரவு புறப்பட்டு திருவல்லாயிக்கு எழுந்தருளினர்.

2-4-54 இரவு ஸ்ரீ அழகியசிங்கர் திருவல்லவாழ் ஸந்நிதியின் பக்கத்திலுள்ள ரெவின்யூ பங்களாவில் எழுந்தருளியாயிற்று. காலையில் அபிகமனம் முடிந்ததும் கோயில் அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரை கோயிலுக்கு எழுந்தருளும்படி ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. ஸந்நிதி வலமாக வந்து ஸந்நிதிக்குள் எழுந்தருளி திருப்பல்லாண்டு தொடங்கி பெரிய திருமொழி ‚தந்தை தாய் மக்களே' என்கிற பாசுரங்களையும் பெரிய திருமடலையும் கோஷ்டியாக அநுஸந்தித்து சாற்றுமுறை செய்து மங்களாசாஸனம்செய்தருளியாயிற்று. மேற்படி ஸன்னிதியில் த்வஜஸ்தம்ப ஸம்ரக்ஷணைக்காக மூன்று அடுக்கு கோபுரம் மாதிரி சட்டப்பட்டிருக்கிறது. முன்புறமாக ஸுதர்சன ஆழ்வாரின் ப்ரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. அங்கிருந்து மத்யானம் புறப்பட்டு ஸாயங்காலம் 6 மணிக்கு 4 மைல் தூரமுள்ள திருவறைவண்டூர் எழுந்தருளியாயிற்று. மேற்படி கோயில் அதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கரை கோயில் மரியாதையுடன் வரவேற்றார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் உள்ளே எழுந்தருளி அந்த எம்பெருமானை திருப்பல்லாண்டுதொடங்கி ‚வைகவபூம்கழிவாய்' என்கிற திருவாய்மொழியை கோஷ்டியாக அநுஸந்தித்து சாற்றுமுறை செய்து மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. ஸாயம் ஸந்தியாகாலமாயிருந்தபடியால் அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு மறுபடி ஒருதரம் மங்களா

சாஸனமும் செய்துவிட்டு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் பல்லக்குடன் புறப்பட்டு 4 மைல் தூரமுள்ள திருச்செங்கனூருக்கு எழுந்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளும் விஷயம் மலையாளம் பூராவும் அந்த ஊர் தேசபாஷா பத்ரிகைமூலமும் பொதுஜனமூலமும் அதிகாரிகள் மூலமும் எல்லாஜனங்களுக்கும் தெரிந்திருந்தபடியாலும், பகலிலோ, நடுராத்திரியிலோ, எந்த காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸஞ்சாரமாக எழுந்தருளினாலும், சுற்றுப்புறமுள்ள ஜனங்கள் ரோட்டில் இரண்டு பக்கமும் நின்றுகொண்டு தாய்மார்கள் கைக்குழந்தைகளைக் கையில் வைத்துக்கொண்டு, ராத்திரி காலங்களிலும் அவரவர்கள் வீட்டில் விளக்குடன் வந்து அஞ்சலிசெய்து, தரிசனம் செய்தார்கள். கோயில்களுக்கும்எழுந்தருளும் காலத்தில் கோயில்களில் ஒரே கூட்டமாகக்கூடி தரிசனம் செய்து வருகிறார்கள். திருச்செங்கனூரில் பம்பா நதியின் ஓரத்திலுள்ள ஸத்திரத்தில் எழுந்தருளியிருந்தார். 3-4-54 காலை அபிகமனமானதும் திருச்சிற்றாறு கோயில் அதிகாரிகள் கோயில் மரியாதையுடன் வந்து ப்ரார்த்தித்ததின்பேரில் அந்த ஸந்நிதிக்கு எழுந்தருளி 'வார்கடாவருவி' என்கிற திருவாய்மொழியை திருப்பல்லாண்டு தொடக்கமாக கோஷ்டியாக அநுஸந்தித்து சாற்றுமுறை செய்து மங்களாசாஸனம் செய்தருளினார். அங்கிருந்தபடியே திருப்புலியூருக்கு 4 மைல் தூரமுள்ள விடத்திற்கு எழுந்தருளி 'கருமாணிக்க மலைமேல்' என்கிற திருவாய்மொழியை முன்போலவே கோஷ்டியாக அநுஸந்தித்து சாற்றுமுறை செய்து மங்களாசாஸநம் செய்தருளினார். மேற்படி திவ்யதேசம் பூமிமட்டத்திற்கு சுமார் 15 அடி உயரத்தில் மலைமேல் இருப்பதுபோல் அழகாக இருக்கிறது அங்கிருந்து புறப்பட்டு சுமார் 11 மணிக்கு தாமிறங்கியிருக்கும் சத்திரத்திற்கு எழுந்தருளினார். அதற்குமேல் இஜ்யை மங்களஹாரத்தி நடந்து ததீயாராதனம் நடந்தது. அன்று ராத்திரி 3 மணிக்கு புறப்பட்டு 4-4-54 உதயத்திற்கு திருவாரன்முளைக்கு எழுந்தருளினார். அங்கும் பம்பா நதி ஓரத்தில் விசாலமான பங்களாவில் எழுந்தருளியிருந்தார். அபிகமனமானதும் 9 மணிக்குமேல் அதிகாரிகள் வந்து ப்ரார்த்தித்ததின் பேரில் பம்பை தென்புரத்தில் ஸந்நிதி அழகாக அமைந்திருக்கிறது. கோயிலுக்குள் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்து ஸ்ரீ அழகியசிங்கரை தரிசித்தனர். தேவஸ்வத்தின் நிர்வாஹத்தின் பேரில்மதபோதனை ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தி வருகிறார்கள். மேற்படி மதபோதனை பாவி மாணவர்கள், மாணவிகள் திரளாக நின்று பக்தி பாடல்களை பாடிக்கொண்டு வரவேற்றார்கள். அதை கடாக்ஷித்து விட்டு உள்ளே எழுந்தருளி 'இன்பம் பயக்க' என்கிற திருவாய்மொழியை திருப்பல்லாண்டு தொடக்கமாக கோஷ்டியாக அநுஸந்தித்து சாற்றுமுறை செய்து மங்களாசாஸனம் செய்தாயிற்று. பெருமாள் திருமுக மண்டலம் உள்பட பூராவும் தங்க கவசம் சாத்திக்கொண்டிருந்தார். விசேஷ அலங்காரத்துடன் ஸேவை ஸாதித்தார். மேற்படி ஸந்நிதிக்கு இடது புரத்தில் பலராமன் ஸந்நிதி இருக்கிறது. அவரும் சதுர்புஜராக ஸேவை ஸாதிக்கிறார். அவரை மங்களாசாஸநம் செய்து விட்டு மேற்படி ஸந்நிதி வலமாக வந்து ஸந்நிதிக்கு ஒரு பர்லாங்கு தூரமுள்ள சத்திரத்திற்கு சுமார் 11 மணிக்கு எழுந்தருளினார். கூட வந்த கோயில் அதிகாரிகளிடம் கவசமில்லாமல் மறுபடியும் ஸாயங்காலம் வந்து ஸேவிப்பதாக ஸாதித்தாயிற்று. ஸாயங்காலம் சுமார் 5 மணிக்கு தேவஸ்தான ஸூப்ரண்டு அவ்வூர் மாஹாத்மியத்தைப்பற்றி சுமார் 300 வருஷத்திற்கு முன் குடியிருந்தவரால் எழுதப்பட்டு தத்காலம் ப்ரசுரித்திருக்கும் புஸ்தகத்துடன் வந்து அதை ஸ்ரீ ஸந்நிதியில் வாசித்துக்காட்டினார். ஸாயங்காலம் பானக ஆராதனம் நித்யாநுஸந்தானம் சாற்றுமுறை ஆனவுடன் மறுபடி ஸந்நிதிக்கு எழுந்தருளி தாம் மனோரதித்தபடியே கவசமில்லாமல் எழுந்தருளியிருந்த எம்பெருமானை மற்றுமொருதரம் 'இன்பம் பயக்க' என்கிற திருவாய்மொழியை அனுஸந்தித்து மங்களாசாஸநம் செய்தாயிற்று.

(தொடரும்)

199546

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஜய ஸூ சித்திரை-வைகாசி மீ 1954 ஸூ ஏப்ரல்-மே மீ

[உத்தராயணம்; வஸந்த ருது; மேஷ-விருஷப மீ]

13-4-54	சித்திரை மீ 1வ	செவ்வாய்க்கிழமை	மேஷ ரவி 28—57 விஷு புண்யகாலம்.
14-4-54	2வ	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
18-4-54	6வ	ஞாயிற்றுக்கிழமை	சித்திரை; மதுரகவியாழ்வார்திருநக்ஷத்ரம் சித்த்ரா பௌர்ணமி; பிரதமைதிதி.
19-4-54	7வ	திங்கட்கிழமை	த்விதீயை திதி.*
20-4-54	8வ	செவ்வாய்க்கிழமை	அதிதி.
23-4-54	11வ	வெள்ளிக்கிழமை	மத்ஸ்ய ஜயந்தி.
28-4-54	16வ	புதன் கிழமை	தசமி-ஏகாதசி திதித்வயம்.
29-4-54	17வ	வியாழக்கிழமை	ஏகாதசிவ்ரதம்.
30-4-54	18வ	வெள்ளிக்கிழமை	வராஹஜயந்தி.
2-5-54	20வ	ஞாயிற்றுக்கிழமை	● அமாவாஸ்யை.
5-5-54	23வ	புதன் கிழமை	அக்ஷய த்ருதீயை பலராமஜயந்தி.
7-5-54	25வ	வெள்ளிக்கிழமை	திருவாதிரை எம்பெருமானர் (ஸ்ரீபாஷ்யகாரர்)திருநக்ஷத்ரம்.
13-5-54	31வ	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம்.
14-5-54	வைகாசி மீ 1வ	வெள்ளிக்கிழமை	வ்ருஷபரவி விஷ்ணுபதி புண்யகாலம் ஸங்க்ரமண தர்ப்பணம்.
16-5-54	3வ	ஞாயிற்றுக்கிழமை	ஸ்ரீ நரஸிம்ஹ ஜயந்தி.
17-5-54	4வ	திங்கட்கிழமை	○ பௌர்ணமி.
19-5-54	6வ	புதன் கிழமை	கேட்டை 35-வது பட்டம்(களத்தூர்) ஸ்ரீ-அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்.
28-5-54	15வ	வெள்ளிக்கிழமை	ஸர்வஏகாதசி.
30-5-54	17வ	ஞாயிற்றுக்கிழமை	த்ரயோதசி—சதுர்த்தசி திதித்வயம். பரணி 39-வது பட்டம் [மன்னார்குடி] ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்.
31-5-54	18வ	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை

குறிப்பு:— சித்திரை மீ 7வ த்விதீயை திதி. [ஸ்ரீரங்கம் பஞ்சாங்கப்படி.] 28 கெ.பஞ்சாங்கப்படி சித்திரை மீ 8வ த்விதீயை திதியும் [7வ அதிதி] திதிநிர்ணயத்தில் அபராஹ்ணவ்யாப்தியை உத்தேசித்தபோதிலும் இப்பஞ்சாங்கங்களில் காணப்பட்ட கணிதப்படி மேலேகுறிப்பிட்டுள்ளபடியேதான் ஏற்படுகிறது. ஆதலால் எந்த பஞ்சாங்கம் அநுஷ்டானத்தில் இருந்து வருகிறதோ அதன்படியே அநுஷ்டிக்கவேணும். (ஸம்பாதகர்)

Regd. No. M. 4437.

VISISHTADVAITAKOSA

Published under the
direct authority of His Holiness Srivan Sathakopa
Sri SRIRANGASATHAKOPA Yatindra Mahadesikan, 42 nd
JEER OF THE AHOBILA MUTT

This is the most authoritative lexicon comprising explanations of all technical terms, about 10, 000 entries, in Visistadvaita Philosopny culled from more than 107 sanskrit and tamil Visistadvaita classics. It is the first work of its kind brought out under the able editorship of the distinguished scholar

Panditaraja D. T. Tatacharya M. O. L. Reader in Sanskrit,
Sri Venkatesvara Oriental Institute. Tirupati.

It has a comprehensive Introduction in sanskrit by the editor on the Visishtadvaita philosophy and the History of the Sri Vaisnava Sampradaya down to the present Jeer of the Ahobilamutt. This is an indispensable and invaluable reference work to all research scholars in philosophy and especislly Indian philosophy. Foreword is written by professor Dr K. C. Varadachari M. A. Ph. D. professor of philosophy, Sri Venkatesvara College Tirupati.

There is no doubt that it is a monumental work which should be in every library devoted to Indian Thought and Philosophy.

Pages [xxiv,] 374
Half cloth Rs 20-0-0
Full cloth Rs 21-0-0

To be had of: Sri Nrsimha Priya Office,
Trivellore.
South India.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.